1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு மாசி மாதம் 17-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 7-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

காற்றுவீசுவதாலே பனிசாந்தியாயிருக்கின்றது. மலைழக்கோலமும் இடையிடையே சிறுகக்காணப்படுகின்றது. மாத்தட்டுப்பாடுகாரணமாக மாமூட்டையொன்று 40 – 41 ரூபாவரையிலும் விலைபடுவதாகத்தெரியவருகிறது.

### கலைச்சொல் அகராதி

சர்வகலாசாலைவரையிலே பாடசாலைகளில் விஞ்ஞான – தொழில்நுட்ப பாடங்களுக்குத் தேவைப்படும் தமிழ்ச் சொற்களைக்கொண்ட கலைச்சொல் அகராதியொன்று சமீபத்திலே பிரசுரஞ்செய்யப்பட விருக்கிறது. தமிழ்ப்பண்டிதர்கள் அறுவரைக்கொண்ட விசேஷகம்மிற்றியொன்றே இந்த அகராதியைத் தொகுத்துக் கல்விமந்திரி காரியாலயத்திற்கு அனுப்பிவைக்க, அது இதனை அச்சேற்றுமாறு அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைத்திருக்கின்றது. இனிமேல்தமிழிலே விஞ்ஞான–தொழில்நுட்ப சம்பந்தமான பாடப்புத்தகங்களை எழுதுகிறவர்கள் இந்தக் கலைச்சொல் அகராதியில் அடங்கியுள்ள சொற்களையே உபயோகிக்குமாறு கல்விஅதிகாரிகளால் வற்புறுத்தப்படுவார்கள். விஞ்ஞானபாடங்களைக் கற்பிக்கும்படியாக ஆங்கிலத்தில் இருந்துவரும் புத்தகங்கள்யாவும் விரைவிலே சுயபாஷைகளில் மொழிபெயர்க்கப்படுமெனத் தெரியவருகிறது. சிங்கள கலைச்சொல் அகராதியைத் தொகுக்கும்வேலை இன்னும்பூர்த்தியாகவில்லை.

### பருத்திச்செய்கை விருத்தி

அரசாங்க கைத்தொழிற்பகுதியானது மழைவளமற்ற பகுதிகளிலே அதிகமானபருத்தி உற்பத்திசெய்யும் இயக்கமொன்றைத் தொடக்கியிருக்கிறது. இதுவிஷயமாய்க் கிராமக்கமக்காரருக்கு அதிகமான பருத்திவிதைகள் வழங்கப்படுகின்றன. தற்போதைய இயக்கத்துடன் இலங்கையிலே பருத்திச்செய்கை நடைபெறும்தேசப்பரப்பை இவ்வருடத்திலே மூவாயிரம்ஏக்கராக அதிகரிக்கும்படிசெய்யவும், ஏக்கரொன்றுக்கு 200 ருத்தல்பஞ்சு உற்பத்திசெய்யவும் கைத்தொழிற்பகுதி திட்டஞ்செய்திருக்கின்றது. அப்போது வருடாந்தபஞ்சுஉற்பத்தி ஆறுலட்சம் ருத்தல்வரை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பர்மாஅரிசி விலை

பர்மாவிலிருந்து இலங்கைவாங்கும் அரிசியின் விலையைத் தொனொன்றுக்கு 48 பவுணிலிருந்து 42 பவுணுகக்குறைப்பதற்குப் பர்மிய அரசாங்கம் சம்மதித்திருப்பதாக அங்குஇருந்துவருகின்ற இலங்கைப்பிரதிநிதியான திரு. ஏ. ஈ. குணசிங்காஅவர்கள் தெரிவித்திருக்கின்றார். அதனுல், இவ்வருடத்திற்குரிய அரிசிக் 'கோட்டா' முழுவதையும் பர்மாவிடமிருந்து நமதுஅரசாங்கம் வாங்குமெனத் தெரியவருகிறது.

### குருசோபிறதர் ஞாபகதினம்

யாழ்ப்பாணத்திலே தம்முடைய தியாகமிக்கசமயதொண்டு,சமூகசேவைகள் காரணமாகப் பிரஸ்தாபம் பெற்றிருந்து காலஞ்சென்ற வண. ஈ. குருசோபிறதர்அவர்கள் அமரத்துவம் அடைந்த ஏழாம்ஆண்டு நிறைவுதினம் சென்ற 13-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்திலே வண. பி. ரி ஜேம்ஸ் சுவாமியவர்கள் தலைமையில் அமைதியாகக் கொண்டாடப்படலாயிற்று. அத்தருணம் குருப்பிரசாதிகளும், பிறதர்அவர்கள் அடியிட்டுநடத்திய பக்திக் கூட்டங்களைசசேர்ந்த அங்கத்தவர்களும், மற்றும்அபிமானிகளும் திரளாகச் சமூகமளித்திருந்தார்கள். வண. எஸ். ஜி. இல்லறி சுவாமியவர்களும், செவாலியர் எஸ். அருளானந்தம அவர்களும், பாதுகாவலன் பத்திரிகாசிரியரும் பிறதர்அவர்களின் பரித்தியாகவாழ்க்கையையும், மற்றும் அரிதானசேவைகளையும், எடுத்துக்காட்டி உணர்ச்சிததும்பப் பேசினுர்கள்.

### பெயரை வெளியிட வேண்டாம்

ஒஷானியா எனும்கப்பல் ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும்வழியிலே சென்ற வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகம் கண்டுசெல்லுகின்றது. தற்போது ஐரோப்பாவிலே கம்யூனிஸ்தஆட்சியில் இருந்துவருகின்ற நாடுகளில்ஒன்றுகிய ஹங்கேரியைச்சேர்ந்த ஓர் 68 வயதுப் பாட்டியும் அதிலே பிரயாணஞ்செய்கின்ருள். 'பாட்டி, உங்கள் நாட்டுப் புதினம் என்ன?' என்று பத்திரிகைநிருபர்ஒருவர் கப்பலிலே ஆவளைப் பேட்டிகண்டு கேட்டார். அதற்குப் பாட்டி, ஹங்கேரியிலுள்ள இன்றைய நிலைமைகளை விளக்கிக்கூறியவிடத்து, "தயவுசெய்து என்னுடையபெயரைமாத்திரம் வெளியிடவேண்டாம்" என்று மன்றாட்டமாய்க் கேட்டுக்கொண்டாள். "அதிகமான நாடுகளிலே கம்யூனிஸ்தர்கள் திறமைவாய்ந்த உளவறியும் அதாவது வேவுபார்க்கும் சேவைகளைக்கொண்டிருக்கிருர்களென்று சந்தேகமின்றியே நான்நம்புகிறேன்; அதனுல் ஹங்கேரியைப்பற்றித் தீமையான காரியங்கள் ஏதுஞ்சொன்னுல், அப்படியானகாரியங்களைச் சொன்னவர்களின் சுற்றத்தவர்களில் ஹங்கேரியஅதிகாரிகள் பழிக்குப்பழி வாங்குவதாய்முடியும்" என்று அப்பாட்டி கூறலாயினள். இவள் மெல்போண்நகரிலே ஓர் வைத்திய மாதுவாயிருக்கும் தனது மகளுடன்போய்ச் சேர்ந்துகொள்வதற்காக ஆஸ்திரேலியாவில் குடியேறப்போகின்ருள்.

### உல்லாசப் பிரயாணக் கப்பல்

செல்வந்தர்களான 383 அமெரிக்க பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு உலகஞ்சுற்றிவரும் 'குங்ஷோல்ம்' எனும சுவீடன்நாட்டு உல்லாசப்பிரயாணக் கப்பல் சென்றதிங்கட்கிழமை கொழும்புத்துறைமுகத்துள் பிரவேசிக்கலாயிற்று. இந்தக்கப்பலின் முதலாவது உலகசுற்றுப்பிரயாணம் இதுவாகும். இதில்பிரயாணஞ்செய்யும் 383 அமெரிக்கபிரயாணிகளினதும் தேவைகளைக் கவனிப்பதற்கெனக் கப்பல் அதிகாரிகளும், பிறருமாய் 452 பேர்இருக்கின்ருர்கள்.

### பிரிவுஉபசார வைபவம்

கொழும்புத்துறைச் சஞ்சுசையப் பர்தாபன தலைவராயிருந்து மாற்றமடைந்துள்ள வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியவர்களுக்கு அத்தாபன பழையமாணவர்சங்கம் நாளை நின்று வரும் 19-ந்திகதி பிற்பகல் 4-30 மணிக்குச் செவாலியர் எஸ். அருளானந்தம அவர்கள் தலைமையில் நமது அச்சகமைதானத்தில் ஓர்பிரிவுஉபசாரம் அளிக்கவிருப்பதாக அறிகின்ளேம்.

### காரியாத்காரிகளின் மகாநாடு

அகில – இலங்கைக் காரியாதிகாரிகளின் (டி. ஆர். ஓ.) மகாநாடொன்று இம்மாதம் 23-ந்திகதியன்று கொழும்பிலே உள்நாட்டுமந்திரி காரியாலயத்தில் நிகழவிருக்கின்றது. அதனுல், இவர்களெல்லாம அம்மகாநாட்டுக்கு வர விட்டுக்கொடுக்குமாறு உள்நாட்டு மந்திரியார் அரசாங்க ஏசன்றர்களையும், உதவிஅரசாங்க ஏசன்றர்களையும் கேட்டிருக்கின்ருர். அதற்கிடையில் அரசாங்க ஏசன்றர்களின் வருடாந்த மகாநாடு இம்மாதம் 24-ம், 25-ம், 26-ம் திகதிகளுக்குப் பின்போடப்பட்டிருக்கிறது. அதற்குக்காரணம் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் இம்மாதம் 18-ந்திகதியன்றுதான் மறுபடி கொழும்புவந்து சேரவிருப்பதாகும். இந்த இருமகாநாடுகளும் மிக மிக விசேஷப்பட்டனவாய் இருக்குமெனக் கருதப்படுகிறது. ஏனெனில், அரசியல்நிர்வாக பிரச்சினைகள்பற்றியும், அடுத்த பொதுத் தேர்தலுக்குமுன் பூர்த்திசெய்யப்படவேண்டிய மற்றும் பொதுவேலைகள்பற்றியும் பிரதமர் இவர்களுக்கு ஆலோசனைகூறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### இலங்கையும் நெல்விளைவும்

மேற்குஆஸ்திரேலிய சர்வகலாசாலையிலே இருவருடகாலம் கமத்தொழிற் கல்வி பயின்றபின்னர் திரு. சென் எல்மோ விஜெயக்கூன்அவர்கள் திரும்பவும் இலங்கைவந்து சேர்ந்திருக்கின்ருர். இவர் அங்குபயின்றதன்பயனுய், நெல்விளைவை இலங்கை அதிகரிக்கச் செய்யக் கூடியதாயிருப்பது மாத்திரமல்ல, ஆனுல், நெல்விஷயமாய்த் தனது சுயதேவையைப் பூர்த்திசெய்யக் கூடியதாயும் இருக்கிறதென்றும், சிற்சிலபயளைகளை வயல்களுக்குஇடுவதாலும், இன்னுஞ்சில வழிவகைகளைக் கையாடுவதாலும் நெல்வேளாண்மையைத் திருத்திவிருத்தியடையச்செய்யலாமென்றும் இவர்கூறுகின்ருர்.

### சுத்தமான பசுப்பால்

திருநெல்வேலி, ஆனைப்பந்தி, நல்லூர், வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணப் பட்டணம், சிவியாதெருமுதலாம்பகுதிகளிலே பிள்ளைகளுக்குக் காலைவேளை இலவசமாகப் பால்உதவும் பல்வேறு நிலையங்களில் தற்போது புதியபசுப் பால்உதவப்பட்டுவருகிறது. இப்பகுதிகளிலுள்ள 41 பால்உதவும் நிலையங்களில் இருபதிலும் தற்போது உதவப்படுவது புதிய பசுப்பாலாகும். 250 பைந் பால்வரையிலே பக்குவமாகப் பாதுகாக்கப்பட்டுத் தலவாக்கொல்லை றெயில்வேஸ்ரேஷனிலிருந்து றெயில் வழிவாக ஒவ்வொருநாளும் காலையிலே யாழ்ப்பாணம் வந்து சேருகிறது.

### அடைக்கலமாதா கோவில்

யாழ்ப்பாணம் பரிசுத்தஅடைக்கலமாதாகோவிலிலே திருமீட்பர் சபையைச்சேர்ந்த வண. கிளன்ஸி சுவாமியவர்களால் இந்தமாசிமாதம் 8-ந் திகதி முதல் ஆங்கிலத்தில் போதிக்கப்பெற்ற அதிகம்சித்திகரமான ஓர்ஞானவொடுக்கம் அடுத்த 13-ந் திகதியாகிய சென்ற ஞாயிற்றுக் கிழமை முடிவடையலாயிற்று. ஆடவர்களும், பெண்மணிகளுமான பெருமக்கள் 300 பேர்வரையிலே இந்தஞானஒடுக்கத்தில் கலந்துகொண்டார்கள். ஞாயிற்றுக்கிழமைகாலை எல்லோரும் கூட்டமாகத் திவ்வியநன்மை பெற்றுக்கொண்டபின் கட்டளைக்குரவர் ஞானவொடுக்கம் செய்தவர்களுக்கெல்லாம் குருமனையிலே ஓர்தேநீர்உபசாரம் நடத்தினர். ஈற்றில் டக்றர் சி. யோசெவ் அவர்கள் நிகழ்த்திய இன்பகரமான ஓர் சொற்பொழிவிலே, ஞானவொடுக்க போதகரான சுவாமிகளசெய்தருளிய மனவருட்சிக்குரிய பிரசங்கங்களுக்காக அவருக்குநன்றிகூறினுர். அதற்குச் சுவாமியவர்கள் தக்கபதில்அளித்தனர். ஈற்றில் டக்றர் யோசெவ்அவர்கள் மகாவக். மேற்றிராணியாண்டவர் அவர்களுக்குத் தங்கள்ஆழ்ந்த விசுவாசப்பிரமாணிக்கத்தையும், கட்டளைக்குரவர் அவர்களுக்கு அன்புமிக்கநன்றியறிதலையும் ஞானவொடுக்கஞ் செய்தவர்கள் அனைவர்போரலும் சமர்ப்பித்துநிற்ருர்.

### தமிழ், சிங்களம் கட்டாயபாடம்

1958-ம்ஆண்டுமுதல் இலங்கைச் சர்வகலாசாலைப் பிரவேசபரீட்சைக்குத் தமிழும், சிங்களமும் கட்டாயபாடமாக ஏற்படுத்தப்பட வேண்டுமெனச் சர்வகலாசாலைச் செனற்சபை சென்ற ஞாயிற்றுக்கிழமை தீர்மானித்திருக்கின்றது. தற்போது இருந்துவரும் சுயபாஷைத் திட்டப்படி 1958-ம் ஆண்டுமுதல் சர்வகலாசாலையில் பிரவேசிக்கும் ஒவ்வொருமாணவனும் தமிழ் அல்லது சிங்களப்பாஷையில் சிறந்ததேர்ச்சி அடைந்திருக்கவேண்டுமென்பதே சர்வகலாசாலை அதிகாரிகளின் விருப்பமாகும்.

### உத்தியோக மாற்றம்

வவுனியா, முல்லைத்தீவு, மன்னுர்ப் பகுதிகளிலுள்ள கிராமச்சங்கங்களின் பரிசீலனை உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிவந்த திரு. பி. ஜி. ஏ. சேனுதிராசாஅவர்கள் நிகழும் மாசி மாதம் 15-ந்திகதிதொடக்கம் இந்தியர், பாகிஸ்தானிகளின் பிரஜாஉரிமையை விசாரணைசெய்யும் பரிசீலனைஉத்தியோகஸ்தராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கிருரென அறிகின்ளேம்.

### முத்துக்குளிக்கும் பெண்கள்

சீனக்குடாவிலும், கிண்ணியாவிலும் வசிக்கின்ற முஸ்லீம்பெண்கள் தம்பலகாமக் குடாவுக்குச்சென்று ஆழ்கடலில் முத்துக்குளிக்க ஆரம்பித்திருக்கின்ருர்கள். இவர்கள் தாங்களாகவே படகுகளைவலித்துக்கொண்டு ஆழமான கடலுக்குச்சென்று நீரில்முழ்கி முத்தெடுக்கின்ருர்கள். சென்றசில வருடங்களிலே அக்குடாவில் ஆடவர்களே முத்துக்குளித்தார்கள். அதற்குக்கூலியாக முத்திலொருபங்குதான் அவர்களுக்குக்கிடைத்தது. இதுசெலவுக்குக் கட்டாததால் அவர்கள் முத்துக்குளிப்பதைக் கைவிடவேண்டியதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கிறீஸ்தவர்களின் கடவுளை ...

ஆல்பன் மிகுந்தகளைப்போடு தன் வீட்டினுள் புகுந்தார். அப்பொழுது அவர்வேலைக்காரன் மார்சியுஸ் அவரை அணுகி: "அதிகம்களைப்பாய் இருக்கிறீர்களே; சுகாசனத்தில் அமருங்கள்; நான் வீணையையெடுத்துச் சற்றே வாசிக்கிறேன்" என்றான்.

அதற்கு அவர்: "இல்லை, நான் கொஞ்சம் நித்திரைசெய்யவேண்டும்; அதற்குமுன் மகள் வலேரியாளைப் பார்க்கவேண்டும்" என்றார்.

அவனும் வீட்டின்சமையலறைப் பக்கம்சென்று, அங்கிருந்தவலேரியாளை அழைத்துவந்தான். தகப்பனைக்கண்டதும் அவள்: "பணிப்பெண் மார்செலினுக்கு உடம்புசுகமாயில்லை; ஆகையால், அவளுக்குச் சிகிச்சைசெய்தேன்" என்றுசொல்லி, அவருடைய தேகசுகத்தை விசாரித்தாள்.

அவர் கொட்டாவிவிட்டுக்கொண்டு, "மகளே! அதிகம்களைப்பாய் இருக்கிறது; எனக்கு இன்றுவயது அறுபதாகின்றது; நான்செய்த வேலைகள் ......" என்று முடிப்பதற்குள்,

அவள்: "ஐயா! எனக்குஎவ்வளவு சந்தோஷம்! கடந்த நாற்பதுவருடங்களாக நமது றோமைச் சக்கிரவர்த்தி உங்களுக்குக் கொடுத்தவேலையை வெகு சுமுத்திரையாய்ச் செய்துவந்திருக்கிறீர்கள்; உங்கள்கணகாணிப்பில் இந்தஇராச்சியத்தில் எத்தனையோ வீதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; உங்கள்வேலைக்காக மெச்சுவதா, அல்லது வயதாகிவிட்டதால் கிலேசப்படுவதா என்று தெரியவில்லை" எனச் சொன்னாள்.

அவர் ஆசனத்தில்அமர்ந்துகொண்டு "உண்மைதான், நான் என்வேலையைச் செய்துவருகிறேன்; ஆனால், இந்த வயதுசென்றகாலத்தில் உன்னைப்பற்றிய நினைவுதான் என்மனதில் சதா குடிகொண்டுள்ளது; இன்னும் எவ்வளவுநாள் சீவிப்பேனோ தெரியாது; எனக்குப்பின் நீ தனிமையாய் இருப்பதுஎங்ஙனம்? ஆகையால், என்கண்காண உனக்கு ஓர்கணவனைத் தேடவேண்டுமென்பது எனது ஆவல்; நீ இதைப்பற்றி நினைத்ததில்லையா? உனக்குத் துணைவனைத் தேடுவதிலே நம்முடையதேவர்களின் உதவியை நாடவேண்டும்; இதோ தூபம்போடுவோம்" என்றுஎழுந்து, தனதுமகளின் கரங்களைப்பிடித்து, அறையின் ஓர் இடத்திலிருந்த மேர்க்கறி தேவதையின் சிலையைநோக்கிச்சென்றார்.

வலேரியாள் கையைஉதறியவளாய்ச் சற்றுப் பின்வாங்கி: "தந்தையே! நீங்கள் சொல்வதுசரிதான்; ஆனால், எனக்குத் துணைவனைத்தேடுவதற்குத் தேவர்களின் உதவி வேண்டாம்; மேலும், அவர்களின்மேல் எனக்கு வெறுப்பாயிருக்கிறது" என்றாள்.

இதைக்கேட்டதும் ஆல்பன் மார்பு அடைத்தவர்போல்: "என்ன! உனக்கு இந்தப்புத்தி எங்கிருந்துவந்தது? உன் மனதைக் கெடுத்தது யார்? நம்முடையதேவர்கள் நமக்கு என்னதான் செய்யமாட்டார்கள்? என்கண்மணியே! உனக்கு வஞ்சகமூட்டியதுயார்? என் வயோதிபத்திற்கு இரங்கு" என்று அவளை அரவணைத்தபடி கேட்டார்.

வலேரியாள் சஞ்சலப்படாமல் தெளிவாகவும், சாந்தமாகவும்: "அப்பா! யாரும் எனக்கு மோசம்செய்யவில்லை; நான் கிறீஸ்தவர்களின் கடவுளைப் பார்த்தேன்" என்றாள்.

ஆல்பன் திக்பிரமைகொண்டவராய், "உன்பேச்சு நூதனமாயிருக்கிறதே; எங்கே பார்த்தாய்?"

"நீங்கள் இப்போதே அமைத்து முடித்த வீதியில்."

"அது கிறீஸ்தவர்களின் கடவுளென்று சொன்னதுயார்?"

"ஒருவருமில்லை. அவருடையகண்களே புலப்படுத்தின. மரஞ்செடிகொடிகள் அவரைக்கண்டு பணிந்து நிம்மதியாயிருந்தன."

"அவர் குதிரைச்சவாரி செய்தாரா?"

"இல்லை, அவர் தனிமையாக நடந்து சென்றார்."

"என்ன! ஓர் கடவுள் நடந்து போனாரா?"

"ஆம், அவர்கால்களிலிருந்து இரத்தம்வடிந்தது ..... ஓர்சிலுவையையும் தூக்கிச்சென்றார்...... நான் என் வண்டியினுள்இருந்து அவரைப்பார்த்ததும் என்உடல் சிலிர்த்தது. கண்ணீர் என்பார்வையை மங்கலாக்கியது. கண்ணைத் துடைத்துக்கொண்டு அவரை மறுபடியும் உற்றுநோக்கினேன். அதற்குள் அவர்மறைந்துவிட்டார்."

"மகளே! அது ஓர்கனவு. கிறீஸ்தவர்களின்தேவன் எந்தக் காலத்திலேயோ ஓர்மலைமேல் இறந்துபோனாரே! அவர் இங்கேஎப்படி வரக்கூடும்?"

"அவர் எங்கும் இருக்கிறார் என்று சொல்லுகிறார்களே."

"என்ன பைத்தியம். ஓர் பிச்சைக்காரனையா றோமராகியநாம் கடவுளென்பது! அந்தப்புத்தியை விட்டுவிடு. இங்கேவா! நமதுதேவர்களுக்குத் தூபம்போடலாம்."

(அப்பொழுது வெளியேயாரோ கதவைத்தட்டும் சப்தம்கேட்டது. வலேரியாள் நகரவில்லை.)

வலேரியாள் அசையாமல் நிற்பதைக் கண்ட ஆல்பன்: "யாரோவந்திருக்கிறார்; மகளே! நீ அந்தக்கிறீஸ்தவர்களுடன் பேசியதை யாராகிலும் பார்த்திருப்பார்களா?"

"தியோக்கிளேசியனின் சட்டப்படி கிறீஸ்தவர்கள் கொலைக்களத்திற்குப் போவதைத்தான் நான் பார்த்திருக்கிறேன். எவ்வளவுசாந்தமாய்ச் செல்லுகின்றனர். தங்கள் கடவுளுக்காகச் சாகவேண்டுமென்று ஆவல்கொண்டவர்களாய் அவர்கள் அவரதுஉதவியைக் கேட்கிறார்கள். றோமராகியநமக்கு இது ஓர்நூதனம்......"

தந்தைக்குரிய அன்புடனும், ஆவலுடனும்: "ஐயோ! உன்மனதை யாரோகுழப்பிவிட்டனரே! தியோக்கிளேசியானின்சட்டம் உன்மீது பிரயோகிக்கப்பட்டு, நீயும் கொலைக்களத்துக்கு ஆளாவாயோவென்று அஞ்சுகிறேன்." (வெளியே சத்தம்அதிகரித்தது.)

மார்சியுஸ் கதவைத்திறந்துகொண்டு உள்ளேநுழைந்து: "வெளியே வழிப்போக்கன்ஒருவன் வந்தான்; அவனுக்குக் கொஞ்சம்உணவு கொடுத்தேன்; உங்களிடம் சிலவார்த்தைகள் பேசவேண்டுமென விரும்புகிறான்; இந்தக் கிறீஸ்தவ குருமாரைப்போல் நீண்ட கறுப்புஅங்கி தரித்திருக்கிறான்; வழிச்செலவுக்கு ஏதாவதுகொடுத்தால் போய்விடுவான்போல் தெரிகிறது" என்றான். அவனை அழைத்துவரும்படி ஆல்பன் கட்டளையிட்டார்.

மார்சியுஸ் வெளியேசென்றதும் வலேரியாள் தகப்பனைநோக்கி, இந்த வழிப்போக்கருக்குக் காசுபணம் தேவையிராதென்றும், ஆகையால், கொடுக்க வேண்டாமென்றும் சொன்னாள்.

ஆல்பன் எதுயுக்தியென்று தனக்குத்தெரிந்ததோ அதைச்செய்வதாகச் சொல்லி, மேர்க்கறியின் சிலைஇருந்த இடத்திற்குச்சென்று தூபம்காட்டி, "எல்லாம்வல்ல கடவுளே! என்னையும், என்குழந்தையையும் மன்னிக்கவேண்டும்; உன்கோபம் எங்கள்மேல் விழாதிருக்கக்கடவது" என்றுபிரார்த்தித்து, வலேரியாளையும் தூபம்காட்ட அழைத்தான். அவளோ மறுத்துவிட்டாள். ஆல்பன் திகிலடைந்து: "பேதாய்! நீ செய்வது இன்னதென்று அறியாய்; தேவர்கள் உன்னைப் பொசுக்காதிருக்க வேண்டும்" என்றுசெபித்து, என்ன சொல்வதென்று தெரியாமல் மெய்மறந்தவராய் ஒருபாத்திரத்தில் கொஞ்சம்தண்ணீர் [illegible] சொன்னார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## சொக்கச் சிவப்பரா, வர்ணம்கலங்கிய சிவப்பரா?

கம்யூனிஸ்த நாடுகளில் ஒன்றாகிய யூகோசிலேவியாவின் ஜனாதிபதியும், சர்வாதிகாரியுமான மாஷல் ரிற்றோ அவர்கள் வட இந்தியாவிலும், பர்மாவிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டுத் தென்னிந்திய சுற்றுப்பிரயாணத்தைத் தொடக்கியுள்ளனர். ஒருபெரிய நாட்டின் பொறுப்புள்ள தலைவர் இவ்வளவுநீண்டகாலம் இந்தியாவில் போக்குவதன் மர்மம்என்ன? இவர் சில காலத்திற்குமுன் இங்கிலாந்திற்குச் சென்றபோது பிரபல ஆங்கிலபத்திரிகைகளில் ஒன்றாகிய "சண்டே எக்ஸ்பிறெஸ்' எனும் பத்திரிகையில் "கௌரவமற்ற விருந்தாடி" என்ற தலையங்கத்துடன் வரையப்பெற்றிருந்த கட்டுரையிலே பின்வரும் வசனங்களும் அடங்கியிருந்தன: "தனது அரசனுக்கும், பிறகு தனது சகாக்களுக்கும், கடைசியாகத் தனது மாபெரும்நண்பனாகிய ஸ்ராலினுக்கும் துரோகம் இழைத்த இந்தரிற்றோ நமதுநாட்டிற்கு நண்பராக இருக்க முடியுமென்று நமது அரசியல்தலைவர்கள் கருதுகிறார்களா?... ரிற்றோ யூகோசிலேவியாவில் கிறீஸ்து சமயத்தை வேரோடு களைந்தெறியத் திட்டம் பண்ணியுள்ளார்* ... யூதர்களைவெறுத்த ஒருதலைவனை நமதுநாட்டிற்கு அழைக்க முன்னொருநாள் பிரித்தானியவெளிநாட்டு மந்திரி திரு. அந்தோனி ஈடன் அவர்கள் சம்மதிக்கவில்லை. கிறீஸ்துசமயத்தை அழிக்கத் தேடுகிறவர்களைப் பற்றிய பிரச்சினை எழுகையில்மட்டும் நம்முடைய தலைவர்கள் கண்ணையுங் காதையும் மூடிக் கொண்டிருப்பது வருந்தத்தக்கது..."

ரிற்றோ லண்டனில் இறங்கியபோது அவர்சென்ற பாதையின் இருமருங்கிலும் அணிவகுத்துநின்ற பொலிசருக்கும், வேடிக்கைபார்க்கச் சென்றிருந்த மக்களுக்குமிடையே எட்டுஅடி தூரம் காலியாக விடப்பட்டிருந்தது. அந்த மக்களிடையே சாதாரணஉடையணிந்திருந்த இரகசியப்பொலிசரும் ஏராளமாகவிருந்தனர். ரிற்றோ இறங்கி வந்தபோது இந்தப்பொதுமக்கள் கைகொட்டவுமில்லை, வாழ்த்துக் கூறவுமில்லை. இந்த ரிற்றோ ஸ்ராலினைவிட்டுப் பிரிந்துவிட்டதால் சிவப்புநிறத்தை இழந்துவிட்டாரென்று நம்புவதா? 1954-ம்ஆண்டு தைமாதம்16-ந்திகதியன்று நியூயோக்நகரில் வெளியான "பிறீமன் சஞ்சிகை" (The Freeman Magazine)யிலே, 1946-ம்ஆண்டுவரை ரிற்றோவின் செய்திப்பகுதித்தலைவராயிருந்த திரு. போக்தான் ராடிட்ஸா என்பவர் † எழுதிய கட்டுரையில் பின்வரும் தகவல்களை வெளியிட்டார்: "கம்யூனிஸ்த முறைகளைப்பற்றி ஸ்ராலினுக்கும், ரிற்றோவுக்கும் அபிப்பிராயபேதம் கிடையாது. ஏதோ சொந்தக் காரியங்களைப்பற்றியே இவர்கள் இருவருக்குமிடையே மனத்தாங்கல் ஏற்பட்டது. ஸ்ராலின் இறந்து மலென்கவ் அதிகாரத்திற்கு வந்தவுடனே ருஷியாவுக்கும், யூகோசிலேவியாவுக்குமிருந்த பிணக்குத்தீர்ந்துவிட்டது. இப்பொழுது யூகோசிலேவியா மறைமுகமாக ருஷியாவின் நேசநாடாக (ally) இருந்துவருகிறது."

ரிற்றோ பகிரங்கமாக ருஷியாவின் நண்பன்என்று காட்டிக்கொள்ளாமல் மறைமுகமாக வேலைசெய்தால் ருஷியாவுக்குப் பெருத்தநன்மைஉண்டு. 'சுயேச்சைக் கம்யூனிஸ்த' என்றவேஷத்துடன் ரிற்றோ கம்யூனிஸ்தல்லாத, ஆனால், சோஷலிஸ்த சார்புள்ள நாடுகளைத் தந்திரமாகக் கம்யூனிஸ்தவலையில் சிக்கவைக்கலாம். யூகோசிலேவியஅரசாங்கம் துருக்கியுடனும், கிரீஸுடனும் செய்துகொண்ட பால்கன் உடன்படிக்கை இந்தக் கபடநாடகத்தின் ஒரு அங்கமாகவே இருக்கக்கூடுமென்று அரசியல்வாதிகள் சிலர்கருதுகின்றார்கள்.

## செவ்வாய்க்கிரக ஆராய்ச்சி

அடுத்த கோடைகாலத்தில் செவ்வாய்க்கிரகம் பூமியிலிருந்து 4கோடியே 3லட்சம் மைல தூரத்தில் இருக்கும். அதாவது, கடந்த பதினைந்துவருடகாலத்தில் பூமிக்கு அதிகசமீபமாக அதுவந்துநிற்பது அப்போதுதான் அதனால் அமெரிக்கஐக்கியதேசம், பிரான்ஸ், இத்தாலி, துருக்கி, இந்தியா, தென்னாபிரிக்கா முதலிய எட்டுநாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஒன்றுகூடிச் செவ்வாயின் சீதோஷ்ணநிலையையும், அதில் சீவசெந்துக்கள் ஏதேனும்உண்டாஎன்பதையும் ஆராய்ச்சி நடத்த இருக்கின்றார்கள்.

பூமிக்கும் செவ்வாய்க்கிரகத்துக்குமிடையேயுள்ள மிகக்குறைந்த தூரம் 3 கோடியே 40 லட்சம்மைல். மிகக்கூடியதூரம் 25 கோடிமைல். சுமார் 15 வருடங்களுக்கு ஒருமுறைதான் செவ்வாய்க்கிரகம் பூமியிலிருந்து மிகவும்குறைந்த தூரத்தில் வந்துநிற்கும். 1939-ம் ஆண்டு ஆடிமாதம் இது பூமியிலிருந்து 3கோடியே 60லட்சம் மைல் தூரத்தில் நின்றது.

செவ்வாயில் ஒருநாள் — அதாவது அது தன்னை ஒருமுறை சுற்றிவர 24 மணி 37நிமிஷம் 22½ வினாடி பிடிக்கின்றது. எனவே, பூமியின் நாளைவிடச் செவ்வாயின்நாள் சற்று நீண்டது. செவ்வாய்க்கு ஒருவருடம்வர —அதாவது அதுஒருமுறை சூரியனைச் சுற்றிவர 687 நாட்கள் பிடிக்கின்றன. சூரியனிலிருந்து பூமியைவிடச் செவ்வாய் அதிகதூரத்தில் இருப்பதால் அதன்மத்தியரேகையை அடுத்துள்ள பிரதேசங்களில்தானும் உஷ்ணம் 60 பாகைக்குமேல் ஏறுவது மிகவும்அபூர்வம். பூமிக்குக் கிடைப்பதைவிட 40 சதவிகிதம் குறைவாகவே உஷ்ணமும், வெளிச்சமும் செவ்வாய்க்குக் கிடைக்கிறது.

செவ்வாய் பூமியைவிடக் குறைந்த பருமனுடையது. அதனால் பூமிக்குள்ள ஆகர்ஷணசக்தியில் ஐந்தில் இரண்டு பாக விகிதமே செவ்வாய்க்கு உண்டு. அதனால் பூமியில் 100சேர்எடையுள்ள ஒருவஸ்து செவ்வாயில் சுமார் 38சேர் எடையே உடையதாயிருக்கும். செவ்வாயின் ஆகர்ஷணசக்தி எவ்வளவு குறைவெனில், அதுஆகாயத்தை இழுத்துப் பிடித்து வைத்திருக்கக்கூடிய நிலையிலில்லை. பூமியின் ஆகாயத்திலுள்ள பிராணவாயுவில் 1000-இல் ஒருபங்கே செவ்வாயில் இருக்கக் கூடுமென்று வானசாஸ்திரிகள் ஒருவாய்ப்படக்கூறுகின்றார்கள். எவறெஸ்ற் சிகரத்தில் இருப்பதைவிடக் குறைந்தஅளவு பிராணவாயுவே செவ்வாயின் ஆகாயத்தில் இருக்கக்கூடுமாம். செவ்வாயிலே தண்ணீரும் மிகச்சொற்பமாகவே இருப்பதாக வானசாஸ்திரிகள் கூறுகின்றார்கள்.

ஆனால், செவ்வாய்க்கு இரண்டுசந்திரர்கள் இருக்கின்றன. ஒன்றின்பெயர் போபோஸ். மற்றொன்றின்பெயர் டெய்மோஸ். இவையிரண்டும் மிகச்சிறியவை. போபோஸின் குறுக்களவு 15 மைல். டெய்மோஸின் குறுக்களவு 8மைல்.

செவ்வாயில் சீவசெந்துக்கள் இல்லையென்பது வானசாஸ்திரிகளின் அபிப்பிராயம். ஆனால், ஏதோவொருவகையான தாவரவர்க்கம் செவ்வாயில் இருக்கக்கூடுமென்று சிலர் கருதுகின்றார்கள்.

---

* தன்னால் ஐந்துவருடம் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டிருந்து, இப்பொழுது அவரது சொந்தக்கிராமத்தில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கருதினால் ஸ்ரெபினாக் ஆண்டவரவர்களுக்குத் திருச்சபைத்தலைவர் கருதினால் பதவி அளித்ததிலிருந்து ரிற்றோ கத்தோலிக்கர்மீது பன்மடங்கு அதிக கோபாவேசங் கொண்டுள்ளார்.

† இவர் பின்னர் ரிற்றோஅரசாங்கத்தின் பயங்கரஆட்சிமுறையை ஆட்சேபித்து யூகோசிலேவியாவை விட்டு வெளியேறி விட்டார். (ச. வி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### மாதாவின் கால்மணிநேரம்

மாதத்தின் ஒவ்வோர் முதற் சனிக்கிழமையிலும் தாங்கள் வேலைசெய்யும் நேரத்தில் கால் மணித்தியாலத்தைத் தேவ தாயாருக்கு அர்ப்பணஞ்செய்யும்படியாய் இத்தாலியதேச பொலொஞ்ஞாநகர் அதிமேற்றிராணியாரான கருதினல் லெர்காரோ ஆண்டவர் தமது ஞான மந்தையைச்சேர்ந்த மக்களைக் கேட்டிருக்கின்ருர். அவர்கள் தேவமாதாவுடன் ஒன்றித்து வேலைசெய்து அந்தககால்மணி நேரத்திலும் கிடைக்கும் ஊதியத்தை மாதாவுக்குத்தோத்திரமான ஏதோஒருகருமத்துக்குக் கொடுக்கவேண்டுமென அவர் ஆலோசனை கூறியிருக்கின்ருர்.

### மரியன்னைவருடம் காட்டியவழி

எபிஸ்கோப்பாலியன் புரொட்டஸ்தாந்தசபைப் பாதிரியாராய் இருந்தவரும், சிக்காகோநகரின் பிரபல பத்திரிகாசிரியரும், நூலாசிரியருமான கனம். ஈர்வின் செனஜோண் ரக்கர்அவர்கள் "மரியன்னையின் வருடம் கத்தோலிக்க திருச்சபையிற் சேர எனக்கு வழிகாட்டியது" என்றுகூறித் தமதுபதவியைச் சென்ற கார்த்திகைமாதம் 1-ந் திகதியன்று இராசினாமாச் செய்துவிட்டுக த்தோலிக்கதிருமறையில் சேர்ந்திருக்கின்ருர். இவர்அங்கே எபிஸ்கோப்பாலியன் சபையைச்சேர்ந்த அர்ச். ஸ்ரீபினின்கோவில் பாதிரியாராக 27 வருடம் கடமையாற்றியிருக்கின்ருர். இவர் 46 வருடம் ஓர்பத்திரிகாசிரியராய் இருந்துவரலானர். அதில் 26 வருடம் சிக்காகோநகரில் பிரசுரமாகும் ஹேர்ஸ்ற் பத்திரிகைகளுடன் ஈடுபட்டிருந்தார்.

### வத்திக்கான் சிறைச்சாலை

லத்தறன் உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்பெற்றதோடு 1929-ம்ஆண்டு வத்திக்கான் இராச்சியம் நவமாக ஸ்தாபிக்கப்படலாயிற்று. அப்போது வத்திக்கான் அதிகாரிகள் அதன் நிர்வாகத்தைத் திருப்திகரமான முறையில் ஒழுங்குசெய்தார்கள். ஓர்புகையிரத ஸ்தானம், தபாற்கந்தோர், வானெலி நிலையம், சிறைச்சாலைஎன்பன அங்கு ஸ்தாபிக்கப்பட்டன. வானெலி நிலையம் தனதுசெய்திகளையும், அபிப்பிராயங்களையும் இருபதுக்குமேற்பட்ட பாஷைகளிலே உலகின் சகலபகுதிகளுக்கும் அனுப்பிவருகின்றது. மறுதபாற்கந்தோர்களைப் போலவே அதன் தபாற்கந்தோரும் எப்போதும், விசேஷமாக யாத்திரைகாலத்திலும் புழக்கமாய் இருந்துவருகின்றது. இத்தாலிய அரசாங்கபுகையிரத ஒழுங்குமுறையுடன் இணைந்துள்ள அதன்புகையிரதம்எதிர்பார்த்த வகையில் ஒருபோதுமே வேலை கொள்ளப்படவில்லை. யுத்த காலத்தில் சாமான்வண்டிகள் போய்வந்தன. ஆனல், இப்போது கைவிடப்பட்டதொன்ருய் அதுஇருந்துவருகிறது. வத்திக்கான் இராச்சியம் ஸ்தாபகமாகி 26 வருடங்களின்பின் அங்கிருந்துவந்த சிறைச்சாலை சென்ற 16-ந்திகதி மூடப்பட்டுவிட்டது. இத்தனைவருடங்களிலும் அதில் நான்குபேர்மாத்திரம் சொற்பகாலம் சிறைவைக்கப்பட்டனர். இனிமேல் வத்திக்கான் இராச்சியத்தில்கைது செய்யப்படுகிறவர்கள் இத்தாலய சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப் படுவார்கள். வத்திக்கான் சிறைச்சாலை ஓர்பண்டகசாலையாக மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

### திருவல்லாநகர் அதிமேற்றிராணியார்

மலையாளத்திலே திருவல்லா நகர் அதிமேற்றிராணியாரும், அங்கு ஐக்கோபித்த பிரிவினைச் சபையைக் கத்தோலிக்கதிருச்சபையுடன் ஐக்கியப்படுத்தும் இயக்கத்தில் மும்முரமாகஈடுபட்டுவந்தவீரர்திலகங்களில் ஒருவருமான யோசெவ் மார் செவேறியோஸ்ஆண்டவர் காத்திராப்பிரகாரம் சென்றதைமாதம் 18-ந்திகதி தமது 60-ம்வயதில் காலஞ்செல்லலாயினர். இவர் ஐக்கோபித்த பிரிவினைச்சபையில் ஒரு குருவாயிருந்துவரும் போது நிரானைநகர்மேற்றிராணியாராய் 1933-ம் ஆண்டு அபிஷேகஞ்செய்யப்பெற்ருர். முன்பு அப்பிரிவினைச்சபை மேற்றிராணியாராயிருந்து பின்னர் கத்தோலிக்க திருச்சபையுடன் ஐக்கியம்பூண்டுகொண்ட மார் இவானியோஸ் அதிமேற்றிராணியாராலும், மார் தியோப்பிலஸ் மேற்றிராணியாராலும் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கியஇயக்கத்தைஎதிர்த்து நிறுத்தும்படியாகவே இவர் மேற்றிராணியாராக்கப்பட்டார். பக்திவைராக்கியம்படைத்த ஐக்கோபித்த சபை மேற்றிராணியாராய் இருந்தபடியால் ரோமாபுரியை நோக்கும் ஐக்கியஇயக்கத்தைத் தடுத்துநிறுத்துமாறு இவர் தம் மால்ஆனதெல்லாம் செய்தார். கத்தோலிக்க திருச்சபையில் யாதும் ஆபாச நியாயங்களைக் கண்டுபிடிக்கும் நோக்கமாய்க் கத்தோலிக்கநூல்களைப் படித்துச்சமயாராய்ச்சி செய்துவந்தார். இந்தஆராய்ச்சியானது தமக்கு முன்னரே அத்துணை அநேகமானேருக்குச் செய்தது போல இவரையும் திருச்சபையின் மடியில் கொண்டுவந்து சேர்க்கலாயிற்று. 1937-ம் ஆண்டு கார்த்திகை 23-ந்திகதியன்று மார்இவானியோஸ் அதிமேற்றிராணியாரின் கரங்களில் இவர் தம்மைஒப்படைத்தார். பிந்தஇவர் திருவல்லாமேற்றிராசன பரிபாலனராயும், 1953-ம்ஆண்டு அதன்அதிமேற்றிராணியாராகவும் நியமனம் பெற்ருர். இவர்தந்தையார் பிரிவினைச்சபையைச் சேர்ந்தவராகவே மரித்தார். ஆனல், இவரின் தாயாரும், இனசனரில்அநேகரும் இவரைப்பின்பற்றித் திருச்சபையில் சேர்ந்துகொண்டார்கள். இவரது அயராமுயற்சியால் திருவல்லா அதிமேற்றிராசன கத்தோலிக்கமக்களின் தொகை இவருடைய ஆளுகை காலத்தில் 6,000 பேரிலிருந்து 16,000 பேராகஅதிகரிக்க, அங்கு தற்போது 70 குருமார் தொண்டாற்றி வருகின்ருர்கள்.

### கருதினல்ஆண்டவர் கூறுகின்ருர்

தூரகிழ்நாடுகளிலே சமீபத்தில் 29 நாட்களில் 29,000 மைல் சுற்றுப்பிரயாணஞ் செய்துள்ள நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல்ஸ்பெல்மன் ஆண்டவர் தமதுநகருக்குத் திரும்பியதும் பின்வருமாறு அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்ருர் :— "ஆசியபிரதேசமானது ஓர்எரிமலையாய் இருக்கின்றது. எந்தநேரததிலும் அது பிளந்துவெடிக்கலாம். எப்படி, எப்போது, எங்கேவெடிக்குமென்பது நமக்குத்தெரியாது. ஆனல், தேவனின் மூலமாக—அவரது திருஇரக்கத்தின்மூலமாக—செபதபத்தின்மூலமாக—பலம்பொருந்திய வழிநடாத்துகையினதும், ஒத்துழைப்பினதும்மூலமாக — நல் மனத்தினதும், நல் உடன்பாட்டினதும் மூலமாக நாம்தப்பிக்கொண்டாலன்றி மற்றப்படி எதிர்காலத்தையிட்டு நாம்பெரிதும் அச்சங்கொள்ளுகின்ரேம்; ஆசியாவின் நிலைமை மிகவும் அபாயகரமாய் இருக்கின்றது. ஆக்கிரமிப்பாளரின் மனப்பான்மையில் எவ்வித மனமாற்றத்தின் அறிகுறியும் காணப்படுவதாயில்லை. நாம் தூரகிழ்நாடுகளுக்குப் போகத் தொடங்கியதுமுதல் ஒவ்வோர் வருடமுமே சுதந்திரஉலகின் தேசப்பரப்பானது வரவரஅதிகம் சிறிதுசிறிதாகிக்கொண்டு வருகின்றது. பேச்சில்தானும் ஆக்கிரமிப்பாளரின் மனப்பான்மையில் மாற்றத்தின் அறிகுறி முற்ருகவேயில்லை."

### கருதினல்மார் விடுதலையடைவரா ?

செக்கோசிலவாகிய, போலாந்த கம்யூனிஸ்த அரசாங்கங்கள் சிறைவைத்திருக்கும் பீறன் அதிமேற்றிராணியாரையும், கருதினல் விசின்ஸ்கி ஆண்டவரையும் விடுதலைசெய்யப்போகும் அறிகுறிகள் காணப்படுவதாய் வீயென்னநகரிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. இதனைத் தொடர்ந்து கருதினல் மின்ட்சென்ரிஆண்டவரும் விரைவிலே விடுதலைசெய்யப் படலாமென்ற வதந்திகள் ஹங்கேரியிலிருந்து பரந்திருக்கின்றன. பிறேக்நகர் அதிமேற்றிராணியாரான பீறன் ஆண்டவர் நற்சுகத்துடன் இருந்துவருவதாகச் செக்கோசிலவாகியசெய்தி தெரிவிக்கின்றது.

### யேசுசபையாரின் திருத்தொண்டு

யேசுசபையைச்சேர்ந்த அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், குருமார், பிறதர்மாராய்த் தற்போது சுமார் 33,000 பேருக்குமேல் இருக்கின்ருர்கள். இவர்கள் 157 திருச்சபைமாகாணங்களில் தொண்டாற்றிவருகின்ருர்கள். இச்சபை உலகமுழுவதிலும் 276கல்லூரிகள், மத்தியபாடசாலைகளையும், 132 சர்வகலாசாலைக் கல்லூரிகளையும், 187 தியானமடங்களையும், 1,320 சஞ்சிகைகள் ஆதியவற்றையும் நடத்திவருகின்றது.

### பெருந்தொகை வேதசாட்சிகளை........

செக்கோசிலவாகிய நாட்டின் கம்யூனிஸ்தஅரசாங்கம் பிர்னோ நகர கம்யூனிஸ்தகம்மிற்றிக்கு அனுப்பியுள்ள வழிநடத்துகைப் பத்திரம்ஒன்றிலே, இரும்புத்திரைக்குப்பின்னல் சமயத்தை எதிர்த்துநடத்தும் போரானது பாடசாலைப்பிள்ளைகளிலே ஒருமுகமாகத் தொடுக்கப்படவேண்டுமெனத் தெரிவித்திருக்கின்றது. "1955-ம் ஆண்டில் பாடசாலைப் பிள்ளைகளிலேயே நமதுமுயற்சிகளை ஒருமுகமாக எடுக்கவேண்டும்; புதியசந்ததியை வெற்றிகொள்வதில் நாம் சித்திபெறுவோமானல், சமயத்தைஎதிர்த்து நடத்தும்போரில் இறுதியாக நாம்வெற்றிகொள்வோம்; பலாத்காரத்தைக் கொண்டு நாஸ்திகத்தைப்பரப்ப எடுத்துக்கொண்ட முயற்சியில் நாம் தோல்வியடைந்துள்ளோம் என்பதுமெய்யே; மக்களின் சமயஉணர்ச்சிகளைப் போக்கும் விஷயமாய் நாம் அபசெயமுற்ரேம் என்பதைஒப்புக்கொள்ளப் பலவந்தஞ்செய்யப் பட்டிருக்கிரேம்; சமயத்தின் பலத்தை நாம்குறைவாக மதித்துவிட்டோம்; திருச்சபைமீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருந்தும்—கம்யூனிஸ்த கட்சியாலும், அரசாங்கத்தாலும் அகோரமான சமயவிரோத பிரசாரம் நடத்தப்பட்டிருந்தும் அவற்றின்பயனய்ச் சிலசனங்களே தங்கள்சமயத்தை மறுதலிக்கமுன்வந்தார்கள்; அதனல், சமயபோராட்டத்தில் கேவலமான பலவந்தத்திற்குப் பதில் வசப்படுத்திக் கருமம்பார்க்கவேண்டும்; சமயத்தைஎதிர்த்து முழுமூச்சுக்கொண்டு நடத்திய யுத்தம் முடிவடைந்தபோதிலும் மாபெருஞ்சத்துருவான சமயம் இன்னுமே நிலைபெற்றிருக்கின்றது; இந்தஉண்மையை நாம் எப்போதும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்; நாம்பின்வாங்கியதையிட்டுத் தோழர்கள் அநேகர் மனவெறுப்படைந்திருப்பார்களென்பதை நாம் அறிவோம்; நமதுகட்சி படிப்படியாகச் செல்வாக்கை இழந்துகொண்டுவர, சமயமோ மக்களிடையே நாள்தோறும் இடையருது பலம்பெற்றுவருவதால் நமதுசமயபோராட்டமுறைகளை மாற்றுதற்குப் பலவந்தஞ்செய்யப் படலானேம். ஆம், பெருந்தொகையான வேதசாட்சிகளை நாம் உண்டுபண்ணிவிட்டோம்" என்றும் அப்பத்திரத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாசிமாதம்

போதுக்கருத்து :— தொழில் நுணுக்க முன்னேற்றம் மக்களைக் கடவுளிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— றொடீசியா, நியாசாலாந்து அடங்கிய மத்திய ஆபிரிக்க சமஷ்டியில் திருச்சபையின் அபிவிர்த்திக்காக வேண்டிக்கொள்வது.

---

### செப அப்போஸ்தல சபை

செபஅப்போஸ்தலர்சபை 1844-ம் ஆண்டு பிரான்ஸ் தேசத்திலே வால்ஸ் என்னும்ஊரில் யேசுசபைக்குருமாணவர்மத்தியில் ஆரம்பமாகி உலகமெங்கும் பரந்து தற்போது கோடிக்கணக்கான அங்கத்தவரைக் கொண்டுவிளங்குகிறது. 1849-ம் ஆண்டு பரிசுத்த பிதா 9-ம் பத்திநாத பாப்பானவர் முதன்முதலாக இதனை அங்கீகரித்தார். அந்நாள்முதல் இந்நாள்வரை பாப்புமாரின் அங்கீகாரத்தைத் திரும்பத்திரும்ப இது பெற்றிருக்கிறது. கடைசியாக 1951-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 28-ந் திகதி பரிசுத்தபிதா 12-ம் பத்திநாத பாப்பரசர் இச்சபையின் புதியஒழுங்குகளை அங்கீகரித்தார். இந்தஒழுங்குகளின் குறிப்புகளை அடுத்தஇதழ்களில் வெளியிடுவோம். இச்சபையை விசாரணைப்பங்குகளில் ஸ்தாபிப்பதற்கும், அதைத் திறம்பட நடத்துதற்கும் அவைகள் உதவியாயிருக்குமென நம்புகிறோம்.

---

# சத்தியவேத பாதுகாவலன்

**1955-ம் ஆண்டு**
**மாசி மாதம் 17-ந் திகதி**

---

மேற்றிராணியாண்டவரின்

## திருமுகம்

**அன்புமிகும் நேயசகோதரரே !**

புதிதாய்ப் பிரசித்தம் பண்ணப்பட்டிருக்கும் திருச்சபைச் சட்டத்தின் படியும், நமக்கு 1949-ம் வருடம் தைமாதம் 28-ந் திகதி பரிசுத்த பாப்பாண்டவரினலே அருளப்பட்டிருக்கின்ற உத்தரவின்படியும் இந்தமேற்றிராசனத்திலே அனுசரிக்கப்படவேண்டிய ஒருசந்தி நாட்களும், சுத்தபோசன நாட்களும் எவைஎவையென்று இத்தால் உங்களுக்கு அறியத்தருகிறோம்.

1. **சுத்தபோசன நாட்கள் :—** வருடத்திலேவரும் சுத்தபோசன நாட்களாவன : வருடத்தில் வரும் எல்லா வெள்ளிக்கிழமைகளுமாகும்.

2. **சுத்தபோசனத்தோடு ஒருசந்தி நாட்கள் :—** விபூதித் திருநாள், பெரிய வெள்ளிக்கிழமை, கர்த்தர்பிறந்ததிருநாளுக்கு முந்திய நாள், தேவமாதா பரலோகத்துக்கு ஆரோபணமான திருநாளுக்கு முந்தியநாள் ஆதியன.

3. ஒருகடன்திருநாள் வெள்ளிக்கிழமையிலே வருமானல் அன்றைய தினத்திலே சுத்தபோசனக் கடன் இல்லை. தேவமாதா பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருநாளும், கர்த்தர்பிறந்த திருநாளும் திங்கட்கிழமையிலே வருமானல் அவற்றின் ஆயத்ததினங்களாகிய முந்தியநாட்களில் அனுசரிக்கவேண்டிய சுத்தபோசனமும், சுத்தபோசனத்தோடு சேர்ந்த ஒருசந்தியும் முற்றாக நீக்கப்படும்.

4. சுத்தபோசன நாட்களைத் தவிர மற்றஎல்லாநாட்களிலும், ஒரேபோசனவேளையில் மாமிசமும், மச்சமும் கலந்துசாப்பிடலாம்.

5. **சுத்தபோசனமென்பது :—** மாமிசத்தையும், அதன் சாரத்தையும் உண்ணாது விலக்குவதிலேயே அடங்கும். ஆனல், முட்டை, பால், வெண்ணெய், பாற்கட்டிமுதலியவற்றையும், சமையலுக்குவேண்டிய கொழுப்புவகைகளையும் வருடத்தில்வரும் எல்லா நாட்களிலும் பாவிக்கலாம்.

6. **சுத்தபோசனம் காக்கவேண்டியவர்கள் யாரெனில் :—** ஏழுவயது நிரம்பினசகலருமாம். ஒருசந்தி பிடிக்கக் கடனுள்ளவர்கள் யாரெனில், 21 வயது முடிந்தவர்களும், 60 வயது தொடங்காதவர்களுமாம்.

7. **ஒரு சந்தி யெனப்படுவது : —** ஒருநேரச்சாப்பாடு மாத்திரம் சாப்பிடுவதில் அடங்கும். ஆனல், காலையிலும், மாலையிலும் சொற்பபோசனம் அருந்துவது ஒருசந்திக்குத் தடையல்ல. ஒருநேரத் திருப்தியான போசனத்தை மத்தியானத்திலாவது, மாலையிலாவது வசதிக்குத்தக்கபடி வைத்துக் கொள்ளலாம். மாலையில்வைத்துக்கொண்டால், மத்தியானம் சொற்ப உணவு உட்கொள்ளலாம்.

8. ஒருசந்திநாட்களிலே பின்னேரஞ் சாப்பிடுஞ் சிறுபோசனத்தில் முட்டையும், பாலும், வெண்ணெயும், பாற்கட்டியுஞ் சேர்த்துக்கொள்ளலாம்.

9. சரீரப் பிரயாசையான வேலை செய்கிறவர்களுக்கும், நியாயமான ஒருவேளைப்போசனம் உண்ணவழியில்லாத ஏழைகளுக்கும், நோயாளிகளுக்கும், நோய்நீங்கிக் குணம்பெற்றுவருகிறவர்களுக்கும், கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டுகிறவர்களுக்கும் ஒருசந்திபிடிக்குங் கடமையில்லை. ஆனல், இவர்களும் வேறு நியாயங்களையிட்டுத் தவிர்க்கப்பட்டாலொழியச்சுத்தபோசனங்காக்கக் கடமைப்பட்டவர்களேயாம்.

**கவனிப்பு :—** மேலே காட்டியிருக்கும் சலுகைகளை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறவர்கள் ஒருசந்திக் கடமையை வேறுவகையாய் — அதாவது பிறநற்கிரிகைகளினலும், விசேஷமாய்த் தருமங்கொடுப்பதினலும் தீர்க்கவேண்டும் (என்று சுத்தபோசன ஒழுங்கில் வேண்டப்படுகின்றனர்). இன்னும் விசேஷமான ஏதாவது நியாயங்களின் நிமித்தம் மேலேகண்டஒழுங்குகளில் மேலும் ஏதாவது சலுகைகள் பெறவேண்டுமானல் ஒவ்வொருவரும் தத்தம் கட்டளைக்குருமாரிடம் உத்தரவுபெற்றுக்கொள்ளலாம். அப்படிப்பெறும் சலுகைகளுக்காகத் தங்கள் கட்டளைக் குருமாரிடங்கேட்டு அதற்காக வேறொருநற்கிருத்தியத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

இஃது யாழ்ப்பாணத்திலே மேற்றிராசன மாளிகையில் 1955-ம் ஆண்டு மாசிமாதம் 16-ந் திகதி விடுக்கப்பட்டது.

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O.M.I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

**குறிப்பு :—** இந்தத்திருமுகம் தபசுகாலத்தின் முன்வரும் முதலாம் ஞாயிற்றுக்கிழமை ஒவ்வொரு பூசையிலும் விசுவாசிகளுக்கு வாசித்துவிளங்கப்படுத்தவேண்டும்.

---

### திருச்சிலுவைக் கன்னிகாசபை

தமது ஆருயிரையே திரணமாகமதித்து, அரும்பெரும் தியாகங்கள் மத்தியிலே நோயாளரைப் பராமரித்தும், வயோதிகர்களைத் தாபரித்தும், சிறுவர் சிறுமிகளைக் கண்காணித்தும், குஷ்டரோகர்களைப் பரிகரித்துப் பாதுகாத்தும் சீரிய தரும தொண்டுகளில் ஈடுபட்டுவருகிற திருச்சிலுவைக் கன்னியாஸதிரிமாரை எவர்க்குமே நாம் அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமில்லையெனவே நம்புகின்றோம். யாழ்ப்பாணத்து அரசினர்ஆஸ்பத்திரியில், ஊர்காவற்றுறைஅரசினர்ஆஸ்பத்திரியில், கொழும்புத்துறைச் சஞ்சூசையப்பர் வயோதிகர்சாலையில், குருநகர குடியேற்றதிட்டத்தில் இந்த நல்லகன்னியாஸ்திரிமார் புகழ்ச்சிக்குரிய விதமாய் — சாதிசமய பேதமின்றியும், செல்வர்வறிஞரென்றவேறுபாடின்றியும் எல்லவருமே போற்றத்தகுந்தவிதமாய்ப் பல்லாண்டுகளாகப் பரித்தியாகசிந்தையுடன் ஆற்றிவருகின்ற வைத்தியதொண்டுகள், சமூகத்தொண்டுகள் முதலாம் பிறர்சிநேக தொண்டுகளைப் பாராட்டாதவர்கள் இல்லையெனலாம். தேவநேசத்தின்பேரால் இப்பிறர்சிநேக தருமதொண்டுகளிலும், சமூகதொண்டுகளிலும் ஈடுபட்டிருக்கின்ற இந்தப்புனித கன்னிகாசபைக்குத் தற்போது யாழ்ப்பாணத்தில் ஓர்புதியயுகம் ஆரம்பமாகியிருக்கிறதெனலாம். யாழ்ப்பாணநகரிலே, கடற்கரை வீதியிலே இந்தக்கன்னிகா சபையினர் அழகேமயமாய் நவமாக அமைத்திருக்கும் திருச்சிலுவைக் கன்னிகாமடமும், அதற்கோர் பொற்திலதம் போன்றுதிகழும் சிற்றாலயமும் சென்ற 10-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் குருமார் பலரும், திருக்குடும்பசபைக் கன்னியாஸ்திரிமார்உட்படப் பெருந்தொகையான கன்னியாஸ்திரிமாரும் குழுமியிருந்த சமூகத்திலே மகாவந். நம்மேற்றிராணியாண்டவர் அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்படலாயின. யாழ்ப்பாணத்திலே திருச்சிலுவைக் கன்னியாஸ்திரிமாரின் முதல்மடம் இதுவாகும். அதனல் அச்சபையின் சரித்திரத்தில் இதுவும் ஓர்முக்கியஸ்தானத்தைப் பெறுவதாகும். அமைச்சல், கற்பு, தரித்திரம் ஆதியமூன்று வாக்குத்தத்தங்கள் கொடுத்துத் தங்களைப் பரிசுத்தராக்கிக் கொள்வதையே முக்கியநோக்கமாகக் கொண்டு, சிறுவருக்குக் கல்விகற்பித்தல், சிசுக்களைப் பரிபாலித்தல், நோயாளரைப் பராமரித்தல், வயோதிகரைத் தாபரித்தல், குஷ்டரோகர்களைப் பராமரித்தல் ஆதியாம் சமூகசேவைகளில் ஈடுபட விரும்புகின்ற — கடவுளுக்குத் தங்களை அர்ப்பணஞ்செய்து அவருடைய நேசத்திற்காகப் பிறர்சிநேக தொண்டுகளாய்த் தருமசிந்தைவாய்ந்த ஆன்ம, சரீரதொண்டுகள்புரிய ஆசிக்கின்ற நமது யாழ்ப்பாணத்து இளம்பெண்பிள்ளைகளின் உள்ளத்தைக்கவர்ந்து, அவர்களை வழிநடத்தும் ஓர்கலங்கரைத்தீபமாக இந்தப்புதிய கன்னிகாமடம் இருந்துவருமெனவே நம்புகின்றோம்.

---

### வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமிகள்

"குடும்பசெபமாலைப் படையணி" இயக்கத்தின் பிரஸ்தாபம்வாய்ந்த ஞானத் தளகர்த்தரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியவர்கள் நமது ஸ்ரீலங்காவிலும் இத்திருப் படையணியைத் தொடக்கி வைக்குமாறு சென்ற சனிக்கிழமை பிற்பகல் ஆகாயவிமானத்திலே இரத்மலானை விமானநிலையம் வந்து சேரலாயினர். அவ்வேளை கொழும்பு அதிமேற்றிராணியார் அங்குசமுகமாயிருந்து அவரை வரவேற்றுநின்றார். இலங்கையிலே சுவாமியவர்கள் தொடக்கிவிட்டுப்போகும் குடும்பசெபமாலைப் படையணி இயக்கத்தின் ஞாபகார்த்தமாக, அவர் இங்கே நடத்திய மகாநாடுகள் பற்றிய விபரங்களுடனே "பாதுகாவலன்" அடுத்த இதழ் "செபமாலைப் படையணி விசேஷ இதழ்" ஆக வெளிவரும்.

---

### —: அறிவுச் சுடர் :—

உலகிலுள்ள சனங்களில் ஒவ்வொரு நூறுபேருக்கும் எத்தனை விகிதமானோர் கம்யூனிஸ்தஆட்சியில்இருந்துவருகின்றனர் ?

37 விகிதமானோர் கம்யூனிஸ்தஆட்சியில் இருந்துவருகின்றனர்.

❋ அர்ச். அகுஸ்தீனர் எத்தனை புத்தகங்கள் எழுதியிருக்கின்றார் ?

232புத்தகங்கள் எழுதியிருக்கின்றார். இவர் கி. பி. 354-ம் ஆண்டுமுதல 430-ம் ஆண்டுவரை சீவித்திருந்தார்.

❋ இங்கிலாந்தின் பழையநாமம் என்ன ?

அல்வியன்என்பது. இதற்கு வெண்மை என்று பொருள். இங்கிலாந்தின்கரையிலே வெண்ணிறப்பாறைத்திடர்கள்பல காணப்படுகின்றன.

❋ அதிகம்உயரத்துக்குப் பறக்கக்கூடிய பறவைஎது ?

தென்னமெரிக்காவிலே அந்தீஸ் மலைச்சாரல்களில் சஞ்சரிக்கும் 'கொண்டோர்' என்ற ஓர்இனக்கழுகேயாகும். இது இருபதினயிரம்அடி உயரத்திற்கு பறந்திருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது.

❋ எந்தப்பறவையின்கூடு உணவாகப் பாவிக்கப்படுகிறது ?

சுவிவ்ற்எனப்படும் ஓர்வகைக்குருவியின் கூடேயாகும். இது தன்னுடைய எச்சிலைக்கொண்டே கூடுகட்டுகின்றது. இந்தக்கூடு சூப்செய்வதற்குச் சீனரால் பாவிக்கப்படுகிறது.

❋ பொய்ப்பற்கள் எதனல் செய்யப்படுகின்றன ?

"போர்ஸ்லெயின்" எனப்படும்வைரமான கோப்பைமண்ணினல் செய்யப்படுகின்றது. அவ்வாறுசெய்யப்படும் பற்கள் மூரசுபோன்றநிறமுடைய ஓர் தட்டில் பதிக்கப்படுகின்றது. இத்தட்டு பிளாஸ்ரிக்பசைகொண்டு செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர குருப்பிரசாதி

"குருவே அதைஎடு! அதைக்கீழே போட்டுக் காலால் மிதி." பிலிப் கேட்ரின் (Philip Curtin)என்ற சீனவேத போதக (மிஷனரிய) குருவானவர் சிலுவையடியில் கண்ணீர்வடித்து நின்ற வீர வியாகுலத்தாய் தம்மைநோக்கிக்கொண்டிருப்பதாக எண்ணினர். மன ஊக்கங்கொண்டு தம்முயிரைக் கொடுத்துச் சத்தியத்திற்குச் சான்று சொன்னர்.

சீனவின்பொதுவுடமை ஆட்சியின்கீழ் பிலிப் கேட்ரின் என்ற வேதபோதகக்குரு கைதியாகிச் சிறையில் வாடுகிருர். மூன்று மாதக் கடுங்காவல். ஈரங்கொண்ட இருட்டறையில் படுத்துத்தூங்குவதென்ருல் முடியாத காரியம். பசியும், குளிர்வாடையும் வாட்டுகின்றன. கொடிய பசியைப்போக்க ஒரேயொரு வேளை ஒருபேணி கஞ்சிதான். வாடைக்குளிரைப் போக்குவதற்குப் போதிய உடையில்லை. இத்துன்பங்கள் சுவாமியாருக்கு எவ்வித மனத்தளர்ச்சியும்கொடுக்கவில்லை. ஆனல், ஏதோஓர் அச்சம் அவர்மனதைப் பிய்த்துத்தின்றது; அதாவது, மக்கள் முன் நடக்கப் போகும் பொதுவிசாரணை, அவமானம், நிந்தைச்சொற்கள், சாணி, கல்லெறிமுதலியவை. நன்மை செய்தவர் தின்மைசெய்தவரென்று பெயர்சூடப்பட்டு மடிவதா? நாட்டு நலனுக்காக உழைத்தவர் நாட்டின் விரோதியென்று தண்டனைபெறுவதா?

மனமுடைந்து அளவுகடந்த அச்சத்திற்கு ஆளானர் சுவாமியார். ஒருநாட்சிறைவாழ்வு ஓர் யுகம்போல் தோன்றியது. மேலும் பொதுவிசாரணை எப்பொழுது வரப்போகிறதென்ற முடிவும் தெரியவில்லை. நடுஇரவிலும் சிறைக் காப்பாளர்கள் திடீரென்றுவந்து கதவைத்தட்டுவார்கள். எச்சரிப்பார்கள். வசைமொழியைக் கக்குவார்கள். போய்விடுவார்கள்.

எதிர்பார்த்தநாள் வந்தது. சுத்தஉடையணிந்து கையிற் கோல்பிடித்துச் சிறைஅதிகாரி ஒருவன் சுவாமியார்இருக்கும் இடத்துக்குவந்தான். அறையின் ஓர்மூலையில் உட்கார்ந்து செபித்துக்கொண்டிருந்த அவரைப் பார்த்தான். அழுக்குப் படிந்த கிழிந்தஉடை. சிக்குப் பிடித்த தாடி. குழிவிழுந்த கண்கள். வெக்கைகாலத்தும் தண்ணீர் கண்டறியாத உடல். கேவலம்! இந்தஏழைப் பரதேசியை ஏறஇறங்கப்பார்த்த அதிகாரி, "சுதந்திர மக்களாட்சியில் இவ்வளவு நாற்றத்தோற்றமா?" என்று அலட்சியமாகப் பேசினன். மேலும் அவரைப்பார்த்து: "இன்றுபகல் 11-30 மணிக்கு அதிகாரிகள்முன் விசாரணை" என்று அதிகாரக்குரலில் கதறிவிட்டுமறைந்தான்.

பகல் 11-30 மணிக்குப் பொதுவிசாரணை. இதைநினைத்தவுடனே சுவாமியாருக்குமயிர்சிலிர்த்தது. அச்சமும், ஆயாசமும் உள்ளத்தைப் பிட்டுப்பிடுங்கவே அவர்உடல் நடுங்கியது.

மணி 11-30 அடிக்க, துப்பாக்கிதாங்கிய போர்வீரன் ஒருவன் சிறைச்சாலையைத்திறந்து சுவாமியாரின் கைகளில் சங்கிலியைமாட்டி, அவரைமேல்மாடிக்கு அழைத்துச்சென்ருன். ஓர் அறையில் ஆறுபேர்உட்கார்ந்து ஒருகையில் பேனவும், மறுகையில் சிகறெற்றுமாயிருந்தனர். அறைமுழுதும் ஏகபுகை. அறையின்மத்தியில் சுவாமியார் கைதியாய்நிற்கிருர். அக்காலத்திலே ஜெருசலேம்நகரில் பிரதமகுரு கைப்பாஸ் தலைமையின்கீழ் வீற்றிருந்த யூதசங்கத்திற்குமுன் கிறீஸ்துநாதர் கைதியாய்நின்ற காட்சி தோற்றமளித்தது. வீற்றிருந்த ஆறுபேரில் ஒருவன் எழுந்து குற்றச்சாட்டுகளைக் கோபஉணர்ச்சியுடன் வாசித்தான். வாசித்துமுடிந்ததும் ஆறுபேருக்கும் தலைமைவகித்தவன் அவரைப்பார்த்து: "குருவே, குற்றச்சாட்டுகளைக் கேட்டாயல்லவா? உன்வாழ்வுமுழுவதும் பொய்களைக்கக்கி மக்களை ஏமாற்றினய்; இருந்தபோதிலும், சுதந்திரமக்களை நடத்தும் நாங்கள் உனக்கு இரக்கங்காட்டத்தயார்; விடுதலைபெறுவாய்; ஆனல், உன்மந்திரக்கோலையும், மந்திரவாதத்தையும் விட்டுவிடவேண்டும்."

மந்திரக்கோல்! எதுஅது? சுவாமியார்தலைநிமிர்ந்து மேசையை நோக்கினர். தம்முடைய பாடுபட்டசுரூபம் மேசைமேற் கிடப்பதைப் பார்த்தார். மூன்று மாதங்களுக்குமுன் தம்மிடமிருந்து பறிமுதல்செய்யப்பட்ட சுரூபம்அது. "இம்மந்திரக்கருவியைக் கையில்எடு" என்று அதிகாரிஅதட்டினன். அவரது கைகள் நடுங்கின. தயங்கினர். அருகிலே, காவல்காத்து நின்ற போர்வீரன் அவரை முதுகில் அறைந்து முன்னே தள்ளினன். அப்போதுமேசைமுன் தள்ளாடி விழுந்தசுவாமியார் இடதுகையால் மேசையைப் பிடித்துக்கொண்டு வலதுகையால் சுரூபத்தை எடுத்தார். "இக்கேவல சின்னத்தைக் கீழே எறிந்து அதை உன்காலால்மிதி" என்று கத்தினன் அதிகாரி. அவர்கைகள் நடுங்கின. கோபாவேசங்கொண்டஅதிகாரி, "அதைக் கீழேபோட்டு உன்காலால்மிதி" என்று தொண்டைகிழியக் கத்தினன். சுவாமியார் நாணல்போல் ஆடிநடுங்கினர். நெற்றிவேர்வை முத்தேபோல் துளிர்த்தது. எல்லாம் கரும்இருட்டாயிருந்தது. அப்பொழுது மணி 12. கிறீஸ்துநாதர் கல்வாரியிலே சிலுவையில் அறையப்பட்டிருந்த நேரம். சிலுவையடியில் நின்று கண்ணீர்வடித்த வீரவியாகுலத்தாய் அவர் கண்முன்நின்று "மகனே பிலிப், நமது அன்புநிறைந்த அருமைக் கிறீஸ்துவையா மறுதலிக்கப் போகிருய்?" என்று தம்மைக் கொஞ்சிக்கேட்பதுபோல் தோன்றிற்று. கரும் இருட்டு விலகியது. ஊக்கம்வர நடுக்கம்நின்றது. பாடுபட்டசுரூபத்தைக்கையால் இறுகப்பிடித்துத் தம்முன்வீற்றிருந்த ஆறுபேரையும் அதுகொண்டு ஆசீர்வதித்தார். வெகுண்டு எழுந்த அதிகாரி தன் துப்பாக்கியால் அவரைச் சுட்டான். குண்டு மார்பில்பாய்ந்து ஊடுருவியது. பாடுபட்டசுரூபத்தைக் கையில் பிடித்தவண்ணம் சுவாமியார் கீழேவிழுந்து உயிர் விட்டார். நண்பகல்—மணி 12.

## சந்தானுள் திருப்பதி — தலைவில்லு
## பங்குனித் திருநாள் — 1955

முதற்பெருநாள் — **7-3-55** — அர்ச். சூசையப்பர்.
இரண்டாம்பெருநாள் — **10-3-55** — அர்ச். யுவக்கீம்முனீந்திரன்.

3-3-55 — கொடியேற்றம். பிற்பகல் 6-30 மணிக்கு வழமையாக ஒவ்வொரு நாளும் ஆராதனை தொடங்கும்.
6-3-55 — பிற்பகல் 6-30 மணிக்குப் பொண்ரிபிக்கல் வேஸ்பர்.
7-3-55 — முற்பகல் 7-30 மணிக்குப் பாடற்பூசை.
9-3-55 -- பிற்பகல் 6-30 மணிக்குப் பொண்ரிபிக்கல் வேஸ்பர்.
10-3-55 — முற்பகல் 7-30 மணிக்குப் பாடற்பூசை.

வாடகைக்கு வீடுகள் உண்டு. மனவருத்தத்தைத் தடுக்கத் தயவு செய்து நேரத்துடன் எழுதி உத்தரவு பெற்றுக்கொள்ளவும். கடை வாடகையும், வீட்டு வாடகையும் 20-2-55-க்குமுன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கார் பாக்கில் மோட்டார் வாகனங்கள் வெயிலில், மழையில் நனையாவண்ணம் மேல் மறைப்புகள் அமைக்கப்படும். வேண்டியவர்கள் தயவுசெய்து 20-2-55-க்கு முன் அறிவிக்கவும்.

சந்தானுள் திருப்பதி, தலைவில்லு.

**வண. ஆர்தர் மாட்டீன் பேர்னுண்டோ**
(பரிபாலகர்)

# பொதுவர்த்தமானம்

—:—

## வாதநோய்க்குப் புதியசிகிச்சை

பரீஸ்நகர ஆஸ்பத்திரிஒன்றிலே டக்றர்மார் கடந்தமூன்றுவருடங்களாக வாதநோய்க்கும், கீல்வாதக் கோளாறுகளுக்குமான புதியசிகிச்சைஒன்றைப் பரிசோதனைசெய்து வருகின்றனர். அதன்மூலம்அவர்கள் ஆயிரக்கணக்கான வாதநோயாளருக்கு நம்பிக்கை பிறப்பித்தும், பார்வைக்கு அலங்கோலமான விகாரரூபங்களை அகற்றிவிடுவதாகப் பெண்களுக்கு வாக்களித்துமிருக்கின்றனர். அவற்றைக் குணமாக்குதற்கென்று ஓர்விசேஷ செயற்கைப்புடவைகொண்டு செய்யப்பட்ட அங்கிகள் பாவிக்கப்படுகின்றன. பரிசோதனையில் இருந்துவரும் நோயாளிகள் இந்தச்செயற்கைநூல்கொண்டு செய்யப்பெற்ற உள்ளுடைகள், உடற்பந்தனங்கள்ஆதியன உதவப்படுகின்றுர்கள். இவைகளை அணிந்துகொண்டு நோய்கண்டபகுதிகளை மேற்புறமாக மெதுவாகத்தேய்க்கும்போது, அவற்றிலிருந்து ஓர்வித மின்சாரம்பிறந்து நோயைச் சாந்திப்படுத்திக் குணமாக்குகின்றது. பிரான்சியமூதாட்டிகள் பூனையின் மிருதுரோமங்கொண்டு செய்யப்பட்ட வாதரோகப் பாதுகாப்புஅங்கிகளைப் பிரயோகித்துவந்தார்கள். இந்த அங்கிகளும் அதே மின்சாரத்தையே பிறப்பித்ததாக அவர்கள்சொல்லுகின்றுர்கள். இந்தப்புதிய சிகிச்சையின் விளைவாக வாதத்தடைஅங்கிகள் தற்போது அங்கேசெய்யப்படுகின்றன.

## சிட்னி-லண்டன் ஆகாயப்பிரயாணம்

ஆஸ்திறேலியாவைச்சேர்ந்த சிட்னிநகருக்கும்,லண்டன்நகருக்குமிடையே கொழும்புவழியாக நாளை 18-ந் திகதி பாரியஆகாயவிமானப் பிரயாணப்போக்குவரத்துஒன்று ஆரம்பமாகவிருக்கின்றது. இந்தப்பிரயாணத்தில் ஈடுபடும் பாரியவிமானங்கள் ஒவ்வொன்றும் பிரயாணிகளும்,விமானிகளும்,அதின்பணியாளர்களுமாக 100 பேருக்குச் சற்றேகூடியதொகையினரை ஏற்றிச்செல்லக்கூடியன. ஒவ்வொன்றிலுமுள்ள எண்ணெய்த்தாங்கிகள் 6,550 கலன்எண்ணெய் கொள்ளக்கூடியன. ஒவ்வொன்றினதும்நீளம் ஏறக்குறைய 114 அடி. சிறகுகள்இரண்டும் இணைந்தபடியே நீளம் 123 அடி. ஒவ்வொன்றினதும் உயரம் 25 அடி. பிரயாணிகளை ஏற்றிச்செல்லும்போது ஒவ்வொன்றினதும்நிறை ஏறக்குறைய 60 தொன். ஒவ்வொன்றிலுமுள்ள நான்குமோட்டர்கள் ஒவ்வொன்றும் 3,250 குதிரைப் பலவேகமுடையனவாய் விமானத்தை மணித்தியாலம் 375 மைல்வேகத்தில் செலுத்திப்போகக்கூடியன. இடையிலேதரியாது இவைகள் 5,000 மைல் தூரத்துக்குப் பறந்துசெல்லத்தக்கன. இவற்றிலே பிரயாணிகளும், விமானிகளும் சௌகரியமாகச் செல்லக்கூடிய சிறந்தவசதிகள் இருக்கின்றன.

*   *   *

● பிரித்தானிய தேசத்திலுள்ள அதிவிருத்தாப்பிய குருவானவர், யேசுசபையைச் சேர்ந்தவரான வண. சாள்ஸ் பாக்தர்சுவாமியாரே. இவர் சென்ற மாதம் 16-ந்திகதி தமது 96-வதுவருட பிறந்தபெருநாளைக் கொண்டாடினர். இவர் 77 வருடங்களின்முன் யேசுசபையில் சேர்ந்தார். கடந்த 63 ஆண்டுகளாக ஓர்குருவாய் இருந்துவருகின்ருர். 1914–18 உலகயுத்தத்தில் இவர் ஓர் பட்டாள விசாரணைக் குருவாயும் இருந்தார்.

● சீனவிலே திருத்தொண்டாற்றிவந்த 150 பிறநாட்டினரான சலேசியன்சபை மிஷனரிமார்களில் எஞ்சியிருந்த இருவரும் கடைசியாக அங்கிருந்தும் நாடுகடத்தப்பட்டுவிட்டார்கள். இவர்களில் வண. கிறெயூட்சர் சுவாமியார் ஓர்ஜேர்மனியர். வண. கன்டுஸ்ஸோ சுவாமியார் ஓர் இத்தாலியர். இவ்விருவரும் ஹொங்கோங்தீவு போய்ச் சேரலாயினர்.

● ஜேர்மனியிலே மூனிச்நகர்வாசியும், கடந்த 50 வருடங்களிலும் பதினுயிரம் பூசைகளுக்கு உதவிசெய்து பிரஸ்தாபம் பெற்றுள்ளவருமான திரு. மாக்ஸ் ஸரம்மர்அவர்கள் தமது 60-ம் வருட பிறந்தபெருநாளைச் சமீபத்தில் கொண்டாடினர். உதவிவேண்டியிருந்தபோது இவர்பலமுறைகளிலும் நாள் ஒன்றிற்கு மூன்றுநான்கு பூசைகளுக்கும் உதவிசெய்திருக்கின்றுர்.

● யுத்தம் நடந்திருந்தபோதிலும் முந்திய எந்தஒரு வருடத்தைக்காட்டிலும் சென்றவருடத்தில் அதிகமான கோறியர்கள் மனந்திரும்பிக் கத்தோலிக்கராகியிருக்கின்றுர்கள். அங்கு வளர்ந்தவர்களாய் 1953-ம் ஆண்டில் 10,057 பேர் கத்தோலிக்கராகியிருக்கின்றனர். தற்போது கோறியாவில் 15,000 பேர் திருச்சபையில்சேர ஆயத்தஞ்செய்து வருகின்றனர்.

● அர்ச். பிரான்செஸ் சேவியர் கபிறினிஅம்மாள் 1917-ம் ஆண்டு மார்கழி மாதம் சிக்காகோநகரில் மரணிக்கும்போது அவ்வர்ச்சியசிட்டவளைத் தனது கரங்களில் தாங்கிநின்ற சங். அனரோனெற்று தெல்லா காஸாதாயார் தனது 75-ம்வயதிலே, தன்னுடைய கன்னிகா வாழ்க்கையின் 58-வது வருடத்திலே மிலான்நகரில் சென்றமாதம் காலஞ் செல்லலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணு சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

மாலைவேளை. கதிரவன் மேற்கே விரைந்து சென்றுகொண்டிருந்தான். யாழ்ப்பாணக் கடற்கரை வீதியால் சென்றுகொண்டிருந்தேன். பாஷையூர்ப் புறவேலியைக் கடந்து சென்றபின் ஒருகட்டடம் என்கண்ணையும், கருத்தையும கவர்ந்தது. பழைய கட்டடம்ஒன்று புதுமெருகு இடப்பட்டிருந்தது. அதைநோக்கிப் பல வாகனங்கள் சென்றன. அவைகளின் சில்லுச் சுவட்டைப் பின்பற்றி நானும் சென்றேன்.

ஏன் சென்றேனு? புதுமனைப்பிரவேச அழைப்புக்கிணங்கித்தான் சென்றேன். என்ன விசித்திரம்! பழைய கட்டடத்தில் புதுமனைப் பிரவேசமா? ஆமாம், ஏழைகள் பழைய கட்டடத்திற்குப் புதுமைபூசி அதைத் தமக்கோா புதிய இல்லமாக்கிக் கொண்டனர். அங்கிருந்த தளபாடங்கள் அவர்களுக்குத் தானமாக வழங்கப்பட்டவை.

பலவர்ணப் பூக்கள் பூஞ்சாடிகளில் அழகு சொரிந்துகொண்டிருந்தன. வாசலில் "நல்வரவு" என்று எழுதியிருந்தது. உட்செல்ல முயன்றேன். பட்டுக் கயிறென்று குறுக்கே மறித்தது. வெண்ணுடை தரித்து வெண்முக்காடு போட்டிருந்த ஒருவரை விசாரித்த பொழுது, "இன்னும் நேரமாக வில்லை" என்று புன்முறுவலுடன் விடைகூறினர்.

அங்குநின்ற எல்லோரும் யாரோ ஒரு பெரியவரைக் காத்து நின்ருர்கள். சிலநிமிஷத்துள் அப்பெரியாரும் வந்திறங்கினர். அவர் யார்? எமது நேய ஆயர். ஆசாரியவஸ்திரங்களை அணிந்து அங்குள்ள சிற்ருலயஞ் சென்ருர். அவ்வாலயத்தையும், அவ்வில்லத்தையும் ஆசீர்வதித்தார். ஆகா! ஆலயத்தைப் பத்திக்குரிய விதமாய் அலங்கரிக்கும் கலையை இவர்களிடமல்லோ கற்கவேண்டும்!

இந்த ஆரவாரமெல்லாம் ஏதுக்காக? திருச்சிலுவைக் கன்னியரின் புதுமடத்திற்காக. இவர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியாதா? ஊர்காவற்றுறையிலும், யாழ்ப்பாணத்திலும் அரசினர் வைத்தியசாலையில் நோயாளரைப் பராமரிப்போர் இவர்கள் அல்லவா? கொழும்புத்துறையில் வயோதிகர்சாலை நடத்துகிறவர்கள் இவர்கள் அல்லவா? குருநகர்க் குடியேற்ற திட்டத்தில் சுகாதார, சமூகத் தொண்டாற்றுகிறவர்களும் இவர்கள் அல்லவா?

தமது சபையிற்சேர்ந்து திருத்தொண்டாற்ற விரும்பும் இளங்கன்னியர்களைப் பயிற்றும் தலமாகத் திருச்சிலுவைக் கன்னியர்கள் இந்தமடத்தை ஆரம்பித்திருக்கிருர்கள். இப்பொழுது ஐவர் பயிற்சிபெற்று வருகிருர்கள்.

தங்கைமார்களே! உங்கள் ஆத்தும இரட்சணியத்துக்கு இலகுவான வழியொன்றைத் தேடுகிறீர்களா? எங்கள் தேசத்திற்கும், எம்நாட்டினர்க்கும் சேவைபுரிய விரும்புகிறீர்களா? உங்கள் சேவையால் பிறருடைய ஆத்துமங்களுக்கு இரட்சணியவழியைக் காட்ட விரும்புகிறீர்களா? அப்படியாயின் இன்றே மேல்வரும் மூகவரிக்கு எழுத முந்துங்கள்.

சங். தாயார் அவர்கள்,
திருச்சிலுவைக் கன்னியர்மடம்,
கடற்கரைத்தெரு, யாழ்ப்பாணம்.

உங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றித் தீர்க்க ஆலோசித்து உங்களுக்கும், பிறருக்கும் ஞானநன்மைகள் தேடுதற்கேற்ற இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கைநெகிழாதீர்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணு.

## மலரும்

சூரியன் வானில் வந்தவுடன்
சொர்ணக் கமலம் மலர்ச்சிபெறும்

●

அம்புலி விண்ணில் வந்தவுடன்
ஆம்பற் பூக்கள் மலர்ச்சிபெறும்

●

கொஞ்சும் தாயார் வந்தவுடன்
குழந்தை உள்ளம் மலர்ச்சிபெறும்

●

மழையும் மண்ணில் வந்தவுடன்
மரமும் செடியும் மலர்ச்சிபெறும்

●

அன்பும் வாழ்வில் வந்தவுடன்
அகமும் முகமும் மலர்ச்சிபெறும் — ஜெயம்

## திருப்பலி

சென்ற ஆறுவாரங்களாகத் திவ்விய பூசைப்பலியைப்பற்றி உங்களுக்குச் சில விளக்கங்கள் தந்தோமல்லவா? இப்போது அவைகளை இங்கு சுருக்கமாகத் தருகிறோம். அவைகளை நீங்கள் மனப்பாடஞ் செய்துகொள்ளலாம்.

1. கடைசி இராப்போசன வேளையில் திவ்வியயேசு முதற்பூசைப்பலி ஒப்புக் கொடுத்தார்.
2. இன்று பூசைசெய்யும் தத்துவத்தைக் குருமாருக்குத் திவ்வியயேசு கொடுத்தார்.
3. சர்வேசுரனுக்கு நாம் காணிக்கை ஒப்புக்கொடுக்கும் பலிக்கிருத்தியமே பூசை
4. அதிற் பிரதானமான காணிக்கை யேசுவின் சரீரமும், இரத்தமும்.
5. யேசுவின் வருகைக்குமுன் மனிதர் மிருகங்களையும், உணவுப் பண்டங்களையும் கடவுளுக்குக் காணிக்கை செய்தனர்.
6. கடைசி இராப்போசன வேளையிலும், சிலுவையிலும் திவ்வியயேசு தம்முடைய சரீரத்தையும், இரத்தத்தையும் சர்வேசுரனுக்குக் காணிக்கை கொடுத்தார்.
7. சிலுவையில் திவ்வியயேசு கொடுத்தகாணிக்கை உலகமுடிவு மட்டும் பூசையில் தொடர்ந்து நிறைவேறுகிறது.

---

## பஞ்சிகை ஞாயிறு சிந்தனை

அக்குருடன் யேசுவிடம் கண் வெளிச்சங் கேட்டதுபோல எங்கள் ஞானக் குருட்டாட்டத்தையும் போக்கும்படி கேட்கிறோம். முயற்சிகிறைந்த இப்பூலோக சீவியம் தேவநேசத்திலும், பிறர்நேசத்திலும் வேரூன்றி இராவிடில் உபயோகமற்றது என்று நான் அறியாமலிருப்பது ஞானக்குருட்டாட்டம்.

---

## விடை கூறுங்கள்

1. யேசுவுக்குப்பின் முதல்குருமாராய் இருந்தவர்கள் யார்?
2. சர்வேசுரனுக்குப் பலியாக ஆபேல் கொடுத்த காணிக்கையென்ன?
3. ஆபேலுடைய காணிக்கையைச் சர்வேசுரன் ஏற்றுக் கொண்டது ஏன்?
4. யேசு கொடுத்த காணிக்கை என்ன?
5. பரமதேவனுக்கு உவப்பான கொடையென்ன?
6. சர்வேசுரனுக்கு நாம் ஏன் பலி செலுத்த வேண்டும்?
7. குருபூசைசெய்யும் பொழுது நாமும் அவருடன் சேர்ந்து கொள்வது எப்படி?
8. பூசைக்குரியவைகள் அடங்கிய புத்தகத்தின் பெயர் என்ன?
9. பீடத்திலுள்ள பூசைப் புத்தகம் என்ன பாஷையில் எழுதப்பட்டுள்ளது?
10. இப்பொழுது ஒப்புக் கொடுக்கப்படும் பூசைப்பலியில் பிரதான குரு யார்.
11. யேசு சிலுவையில்ஒப்புக்கொடுத்த பலியும், இப்பொழுது நிறைவேறும் பூசைப்பலியும் ஒன்றுதானு?

---

## சரியான விடைகள்

சென்றவாரக் "காவல"னில் வெளியான கணிதப்பகுதியின் சரியான விடைகள்.

1. முதலாவது விஞவின் விடை மேலே தரப்பட்டிருக்கின்றது.

2.

| | | | |
|---|---|---|---|
| 5 | 7 | 12 | 10 |
| 16 | 11 | 6 | 1 |
| 9 | 14 | 3 | 8 |
| 4 | 2 | 13 | 15 |

சரியானவிடை கொடுத்தவர்கள்:

கத்தரீன் சின்னமலர் மிராண்டா,
'ஆவே மரியா' கன்னியர்மடம்,
நீர்கொழும்பு.

மோர்சி,
கலவன்பாடசாலை, முன்னக்கரை.

பொவின்,
கலவன்பாடசாலை, முன்னக்கரை.

ஏ. ஜே. மைக்கேல்,
தெமட்டக்கொடை, கொழும்பு.

கணிதப்பகுதியின் 1-வது விஞவிற்கு செல்வி கத்தரீன் சின்னமலர் மிராண்டா அவர்கள் விடை கொடுத்திருந்த விதம் விளக்கமானதும், வியந்து பாராட்டுதலுக்குரியதுமாக இருந்தவினுலே அந்தவிடையை நீங்களும் கண்டு கொள்வதற்காக மேலேதருகின்றோம்.

17 குதிரைகளையும் தகப்பன் சொன்ன பிரகாரம் பகிர்ந்துகொள்ள முடியாது அல்லற்படுவதை அறிந்தநான் என் குதிரையின் மீதேறி அவ்விடம் சென்றேன். 17 குதிரைகளுடன் என் குதிரையையும கட்டி வைத்தேன். அப்போது குதிரைகள் 18.

மூத்தவனுக்கு அரைவாசி எனவே—9
2-வது மகனுக்கு மூன்றில்ஒன்று—6
3-வது மகனுக்கு ஒன்பதில் ஒன்று—2

தகப்பனின் மரணசாசனப்படி 17 குதிரைகளும் பங்கிடப்பட்டன. அவர்களுடைய நன்றியுரையின்பின் என் குதிரைமீதேறி எனது இல்லம் வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசப் பரப்புதற்சபைக்காகச் சேகரிக்கப்பெற்ற பணம்

## யாழ்ப்பாண மேற்றிராசனம் — 1954

| இல. | விசாரணைப் பங்குகள் | சேர்த்த பணம் ரூ. | ச. | பாடசாலைகள் | ரூ. | ச. | அங்கத்தவர் | | மொத்தம் ரூ. | ச. | திருப்பாலத் துவ சபை ரூ. | ச. | இராயப்பர் சபை ரூ. | ச. | அங். தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆசனக்கோவில் | 217 | 75 | தி. கு. ம. ஆங். | 250 | 00 | 116 | 05 | 1028 | 51 | 190 | 70 | 37 | 85 | |
| | | | | தி. கு. ம. தமி. | 200 | 00 | | | | | | | | | |
| | | | | சென்சாள்ஸ் | 50 | 00 | | | | | | | | | |
| | | | | அர்ச். ஆரோக். | 10 | 00 | | | | | | | | | |
| | | | | சென்பற்றிக்ஸ் | 184 | 71 | | | | | | | | | |
| 2 | அச்சுவேலி | 75 | 00 | | 17 | 50 | 36 | 00 | 128 | 50 | | | | | |
| 3 | ஆனைக்கோட்டை | 38 | 42 | | 12 | 52 | 38 | 00 | 88 | ·94 | | | | | |
| 4 | அடைக்கலமாதாகோவில் | 127 | 62 | | 25 | 00 | 32 | 00 | 184 | 62 | 116 | 00 | 68 | 00 | 219 |
| 5 | அனுராதபுரம் | 63 | 44 | | 47 | 50 | | | 110 | 94 | | | | | |
| 6 | அரிப்பு | 65 | 06 | | | | | | 65 | 06 | 13 | 28 | | | |
| 7 | அடம்பன் | 5 | 00 | | 13 | 00 | | | 18 | 00 | 3 | 00 | | | |
| 8 | சுன்னுகம் – மானிப்பாய் | 74 | 60 | | | | | | 74 | 60 | | | | | |
| 9 | கொழும்புத்துறை | 177 | 00 | | | | | | 177 | 00 | | | | | |
| 10 | செட்டிகுளம் | 37 | 55 | | | | | | 37 | 55 | 4 | 00 | | | |
| 11 | நெடுந்தீவு | 9 | 60 | | 46 | 76 | 16 | 50 | 72 | 86 | | 75 | | | 11 |
| 12 | இளவாலை | 56 | 41 | தி. கு. ம. | 345 | 50 | 290 | 04 | 801 | 80 | | | | | 340 |
| | | | | சென்என்றிஸ் | 109 | 85 | | | | | | | | | |
| 13 | ஊர்காவற்றுறை | 21 | 52 | | 30 | 00 | 126 | 00 | 177 | 52 | | | | | |
| 14 | கரம்பன் | 117 | 11 | சி. பு. ஆங். | 50 | 00 | 39 | 00 | 262 | 75 | 8 | 00 | | | |
| | | | | சி. பு. தமிழ். | 56 | 64 | | | | | | | | | |
| 15 | கெக்கருவை | 33 | 14 | | | | | | 33 | 14 | | | | | |
| 16 | கிளிநொச்சி | | | | | | | | | | | | | | |
| 17 | குளமன்கால் | 6 | 27 | | 5 | 00 | | | 11 | 27 | | | | | |
| 18 | மருதமடு | 62 | 64 | | | | | | 62 | 64 | | | | | |
| 19 | மயிலிட்டி | 15 | 30 | | 18 | 00 | 7 | 50 | 40 | 80 | 4 | 30 | 8 | 00 | |
| 20 | முல்லைத்தீவு | 78 | 50 | ஆண்பாட. | 20 | 00 | 9 | 00 | 119 | 20 | | | | | 6 |
| | | | | பெண்பாட. | 11 | 70 | | | | | | | | | |
| 21 | முருங்கன் | 3 | 49 | | 10 | 00 | 3 | 00 | 16 | 44 | 4 | 22 | | | |
| 22 | மன்னார் | 268 | 00 | | 509 | 27 | 9 | 00 | 786 | 27 | 67 | 00 | 20 | 00 | 6 |
| 23 | மண்டைதீவு | 37 | 36 | | | | | | 37 | 36 | | | | | |
| 24 | மிருசுவில் | 49 | 56 | | 11 | 44 | 14 | 00 | 75 | 00 | | | | | |
| 25 | மாதகல் | 39 | 40 | | 57 | 42 | 28 | 00 | 124 | 82 | 18 | 00 | | | |
| 26 | நல்லூர் | | | | | | 27 | 00 | 27 | 00 | | | | | 18 |
| 27 | நாரணட்டான் | 46 | 25 | | 41 | 75 | 28 | 50 | 116 | 50 | | | | | |
| 28 | நாரந்தனை | 19 | 14 | | 35 | 67 | 30 | 29 | 85 | 10 | | | | | |
| 29 | ஊறணி | 150 | 00 | | | | | | 150 | 00 | 40 | 00 | 20 | 00 | 160 |
| 30 | பேசாலை | 206 | 78 | | 69 | 22 | | | 276 | 00 | 65 | 83 | | | |
| 31 | பண்டத்தெருப்பு | 14 | 01 | | 10 | 25 | 71 | 50 | 95 | 76 | | | | | 50 |
| 32 | புதுக்குடியிருப்பு | 54 | 00 | | | | 10 | 50 | 64 | 50 | | | | | |
| 33 | பள்ளிமுனை | 12 | 15 | | 65 | 00 | 19 | 50 | 96 | 65 | | | | | 18 |
| 34 | பாஷையூர் | 23 | 62 | | 36 | 61 | | | 60 | 23 | 21 | 08 | | | |
| 35 | பருத்தித்துறை | 126 | 50 | | | | | | 126 | 50 | | | | | |
| 36 | புங்குடுதீவு | 7 | 10 | | 9 | 00 | 7 | 50 | 23 | 60 | | | | | |
| 37 | சில்லாலை | 30 | 00 | | 22 | 60 | 302 | 90 | 355 | 50 | 2 | 00 | 2 | 50 | 185 |
| 38 | கரையூர் | 79 | 75 | | 159 | 85 | 36 | 00 | 275 | 60 | 41 | 50 | | | |
| 39 | தாளையடி | 16 | 58 | | | | | | 16 | 58 | | | | | |
| 40 | தோலகட்டி ஆச்சிரமம் | 30 | 00 | | | | | | 30 | 00 | | | | | |
| 41 | தலைமன்னார் | 42 | 50 | | | | | | 42 | 50 | | | | | |
| 42 | விடத்தல்தீவு | 44 | 78 | | | | | | 44 | 78 | | | | | |
| 43 | வதிரி | | | | 35 | 07 | 55 | 00 | 90 | 07 | 12 | 50 | | | |
| 44 | வழிமீசாம் | 50 | 00 | | 15 | 00 | | | 65 | 00 | | | | | |
| 45 | வங்காலை | 127 | 35 | | 20 | 68 | 15 | 50 | 163 | 53 | | | | | |
| 46 | வவுனியா | 47 | 33 | | 25 | 00 | 21 | 00 | 93 | 33 | | | | | |
| 47 | உயிலங்குளம் | 12 | 78 | | 43 | 10 | | | 55 | 88 | | | | | |
| | | 2820 | 36 | | 2680 | 61 | 1389 | 28 | 6890 | 25 | 612 | 16 | 156 | 35 | |
| | | | | இருப்பு — 1953 | | | | | 250 | 95 | | | | | |
| | | | | வேறுவழியால் சேர்ந்தது | | | | | 257 | 71 | | | | | |
| | | | | | | | | | 7398 | 91 | | | | | |

## பிரிவு உபசாரம்

24-1-55 திங்கட்கிழமை சுன்னுகம் விசாரணைப்பங்கு துக்கத்திலாழ்க்காரணம், எமது உதவிக்குரவர் வண. ஐவ்ஸ் கரேுவ் சுவாமியவர்கள் இவ்விடம்விட்டுப் பிரியவிருந்ததே. சுவாமியவர்கள் இப்பங்கில் கடமையேற்று ஒருவருடம் முடிவதற்குள் எல்லோரது அன்பையும், நன்மதிப்பையும் பெற்றமையால் அவரின் எதிர்பாராத மாற்றத்தைஎண்ணி மக்கள் மனம்வருந்தியது ஆச்சரியமல்ல. எல்லாம் தேவதிருவுளமென்று நினைத்துப் பிரியாவிடைகூறி ஆசிபெற்று அவரை வழியனுப்பி வைக்குமாறு அன்றுபிற்பகல் 4மணியளவில் சகலரும் ஒன்றுசேர்ந்து குருமனையை அடைந்தனர். மாலைசூட்டியதும் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. பிரியாவிடைநாயகர் அவ்வேளை தமக்கு அருளப்பெற்ற பிரிவுஉபசாரத்துக்கு அளித்த பதிலில், தாம்கிறீஸ்துநாதரின் பிரதிநிதியென்றமட்டில் தமது கடமைகளை ஆற்றிவந்ததாகத் தெரிவித்து, நன்றி கூறி "மன்றுடுங்கள், போய் வருகிறேன்" எனவேண்டி ஆசிகூறிச்சென்றார்.

— எஸ். பாக்கியநாதன்

● சோவியற் அரசின் ஆதீனத்திலுள்ள கிழக்கு ஜேர்மனியிலிருந்து சென்ற 1954-ம் ஆண்டிலே இரண்டு லட்சத்துக்குமேற்பட்ட அகதிகள் சுதந்திரநாடுகளுக்குத் தப்பியோடியதாக மேற்குப் பேளின்நகரிலுள்ள அகதிகள் தலைமைஸ்தானம் அறிக்கையிட்டிருக்கிறது. இந்தஅகதிகளிலே பொலிஸ் அதிகாரிகள்உட்பட மக்கள்பொலிஸைச் சேர்ந்த 2,807பொலிஸர்களும் அடங்குவார்கள்.

● திருவாங்கூர்–கொச்சியிலே கம்யூனிஸ்தகட்சியின் முதன்மைவாய்ந்த தலைவராகிய ரி. வி. சாரங்கதரன் என்பவர் அக்கட்சியிலிருந்து தமது பதவியை இராசினாமாச் செய்திருக்கின்றார். தான் அவ்வாறு இராசினாமாச்செய்யக் காரணம், கம்யூனிஸ்தகட்சி உண்மையான தொழிலாளர்கட்சி அல்லவென அனுபவத்தில் கண்டுகொண்டமைதானெனக் கூறியிருக்கின்றார்.

● திருவாங்கூர்–கொச்சி இராச்சிய பிரஜா சோஷலிஸ்தகட்சி மந்திரிசபை கடைசியாகச் சென்ற 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை கவிழ்ந்துவிட்டது. முதன்மந்திரி பட்டம்தாணுப்பிள்ளையின் ஆட்சியில் நம்பிக்கை இல்லையென்று கொண்டுவரப்பட்ட பிரேரணைக்குச் சார்பாக 60பேரும், மாறாக 30பேரும் வாக்களித்தார்கள். 27 கம்யூனிஸ்த அங்கத்தவர்களும் கருமத்தை விளங்கிக்கொண்டு தந்திரமாக நடுநிலைமை வகித்துவிட்டார்கள்.

## பூசையைப் பற்றி எனது தீர்மானங்கள் :

1. என் குற்றத்தினிமித்தம் ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன்திருநாட்களிலும பூசைகாணத் தவறுவதில்லை.

2. பூசையின் ஆரம்பத்திற்கு வந்துவிடுவேன்.

3. பூசை வேளையில் பூசைப்புத்தகம், அல்லது வேறே செபப் புத்தகத்தைப் பாவித்து அவதானமாய்ப் பூசை காண்பேன்.

4. திருப்பூசையினுல் எனக்கு என்ன இலாபம் என்று என்சீவியத்தில் காண்பிப்பேன்.

— M. J. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு தாண்டவன் வெளி

மட்டக்களப்பு, தாண்டவன்வெளி பரிசுத்த காணிக்கைமாதாவின் திருநாளுக்கு ஆயத்தமான நவநாள்உற்சவம் 2-1-55-ந் திகதி பிற்பகல் 5 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாயிற்று. பங்குக் கிறீஸ்தவர்களால் 5-2-55-ந் திகதி பிற்பகல் 6 மணியளவில் பரிசுத்த காணிக்கைத்தாயின் திருச்சுரூபமானது அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் எழுந்தருளச்செய்து ஒரு மைல்தூரமான வீதிவழியே பயபக்தியுடன் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டு வரப்பட்டதும் ஆலயத்தின் முன்பக்கமாய் அமைக்கப்பட்டிருந்த அலங்கார பந்தரில் திரிகோணமலை மேற்றிராசன பரிபாலனரான அதிவண. ஜே. ரீ. வினிகன் சுவாமியவர்கள் வேஸ்பர்பாட, வண. கட்டலைக்குரவர் ஜி. ஈ. எல். வம்பேக், வண. எல். அல்வக்குக் ஆகிய இருகுரவரும் உதவிபுரிந்தனர். மூன்று நாட்களாக வண. என்றி பொன்னையா சுவாமியவர்கள் பிரசங்கம் செய்தனர். 6-2-55 காலை 7 மணியளவில் வண. எல். அல்வக்குக், வண. எவ். பொண்றர்ஆகிய இருகுரவரும் உதவிபுரிய வண. கட்டலைக்குரவர் ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. பிற்பகல் வேஸ்பர், திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துடன் கொடிஇறக்கப்பட்டுத் திருநாள் முடிவடைந்தது.

— எஸ். ஈ. அந்தோனி

## மாணவர் தேர்ச்சிச்சங்கம்

போளவத்தைக் கத்தோலிக்க சிரேஷ்டஆண்பாடசாலை மாணவர் தேர்ச்சிச்சங்க கூட்டம் சென்ற 11-2-55 வெள்ளிக்கிழமை தலைமை ஆசிரியர் எஸ். எஸ். ஜெட்றிகோஅவர்களின் தலைமையில் ஆரம்பமாயிற்று. அவ்வமயம் புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருமாறு தெரிவுசெய்யப்பட்டார்கள். திரு. என். பிரான்சிஸ், தலைவர். திரு. பெனடிக்ற், உபதலைவர். திரு. வில்மட், காரியதரிசி. திரு. அல்பிறெட், உபகாரியதரிசி. இவர்களுடன் திரு. அன்ரனி, திரு. தமியான், திரு தேவராஜ்உட்பட ஓர் நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது. இறுதியில் தேசீயகீதம் படிக்கப்பட்டுக் கூட்டம் முடிவெய்தியது.

— ஓர்மாணவன்

## வரவேற்பு உபசாரம்

முல்லைத்தீவு மீன்பிடி பகுதிப்பரிசோதகர் திரு. ஏ. பிலிப்பு அவர்களின் திருமணத்தை முன்னிட்டு 9-2-55 புதன்கிழமை மாலை 6மணியளவில் அவருக்கும், அவர்பாரியாருக்கும் முல்லைத்தீவுப் பொதுமக்களால் ஓர் வரவேற்பு உபசாரம் நிகழ்த்தப்பட்டது. திரு. பிலிப்பு தம்பதிகள் மோட்டார்தாருடராய் முல்லைத்தீவுப் பட்டினசபைப் பெருவாயிற்சந்தியை அடைந்ததும் அவரதுநண்பர்களும், பொதுசனர்களும் கூட்டமாய்நின்று அவர்களை வரவேற்று, மலர்மாலைகள் அணிவித்து, அவர்களின் இல்லத்துக்கு அழைத்துச் சென்று பரிமளிப்பான ஓர்உபசாரணை நடத்தினர். — நிருபர்

## அரசாங்க அறிவித்தல்

### வனபரிபாலன பகுதி

N. 380— 28 மரக்குற்றிகளும், 6 கூறு அரிந்த மரங்களும 23-2-55 நண்பகல் 12 மணிதொடக்கம் புளியங்குளம் அரசினர் மரக்காலையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனவுக்குமுன் அவற்றைப் பார்க்கவிரும்புவோர் புளியங்குளம் டிப்போக் கீப்பரின் அனுமதியுடன் பார்வையிடுவதுடன், அவரிடமிருக்கும் விளம்பரத்தின் பிரதான நிபந்தனைகளையும் அறிந்துகொள்ள வேண்டும்.

புத்தக மதிப்புரை

## எட்டாம் வகுப்புத் தேரிவுப் பரீட்சை வினு விடைகள்

ஆக்கியோன் : வித்துவான் எஸ். ஜோசப், அர்ச். பீற்றேர்ஸ் கல்லூரி, கொழும்பு.
விலை : ரூபா 2-50.
பிரசுரம் : நாமகள் அச்சகம்.

எண்கணிதம், தமிழ்மொழி, பொது விவேகம் ஆகியமூன்றும் எட்டாம் வகுப்புத் தெரிவுப் பரீட்சைக்குரிய பாடங்களாகும். அப் பாடங்களால் மாணவர்பெற்றஅறிவை மனதில்நன்கு பதித்தற்கு உதவியளிக்கு முறையில் நன்குவகுக்கப்பட்ட 55 வினுப்பத்திரங்களை அடக்கியது இந்நூல். (எண்: 25; தமிழ்மொழி: 20; பொதுவிவேகம்: 10.) ஆதலால் இந்நூல் மூன்றும் பருவ மீட்டற்பயிற்சிக்கு ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் பெருந்துணையளிக்கும் தகுதிவாய்ந்ததென்பதே எமது அபிப்பிராயமாகும்.

ஆசிரியர், 8-ம் வகுப்பு மாணவருக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்!

100 பக்கங்கொண்ட் உயர்ந்தகிளேசில் அச்சேறிய அறிவானநூல். 1. எண்கணிதம், 2. பாஷை, 3. பொது விவேகம் அடங்கிய 8-ம் வகுப்புத் தெரிவுப்பரீட்சை (Eighth Std. Selective Test). விலை ரூ. 2-50. புத்தக வியாபாரிகளுக்கு 25% கமிசன். தனிப்பிரதிக்கும் ஆடர்செய்யலாம்.

வித்துவான் S. Joseph,
St. Peter's College, Colombo.

## நன்றியறிந்த தோத்திரம்

நான் அடைந்துகொண்ட அநேகசகாயங்களுக்காகப் பிறேக்நகர் திருக்குழந்தை யேசுவுக்கும், பரிசுத்த சதாசகாய்மாதாவுக்கும், அர்ச். சூசையப்பருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்குமுகமாக இதனைப் பிரசுரஞ்செய்கின்றேன்.

ஓர் அடியான்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின்திருஇருதய இரக்கத்தாலும், சதாசகாயமாதாவினதும், அர்ச். சூசையப்பரினதும்உதவியால் நான்கேட்ட மன்றாட்டுகள் கிடைத்தன. நேர்த்தியின்படி இதைப் பத்திரிகையில் பிரசுரிக்கிறேன். அவர்களின் நாமங்கள் மேன்மேலும் வாழ்த்தப்படக்கடவன.

மாதாவின் அடிமை
A. C.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 25-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்ருலயத்தில் நடந்தேறும். அவ்வேளை நான்கு சகோதரர்கள் நிலையந்தஸ்தில் சேர்வதற்குத் தமது வாக்குத்தத்தங்களை யெடுப்பார்கள். பங்குனி மாதத்தில் பரிபூரணபலன்களையடையக்கூடிய நாட்கள் பின்வருமாறு:— 4, 5, 6, 9, 11, 18, 19, 22, 25, 26, 28, 30. பொதுப்பாவமன்னிப்பு அடையக்கூடிய நாட்கள் :— 4, 19, 25.

A. S. FRANCIS OF MARY
for Director

## சட்டக்கல்லூரிப் பரீட்சை

கொழும்பிலே சென்ற மார்கழிமாதம் சட்டக்கல்லூரிச் சங்கம் நடத்திய சட்டசாஸ்திரபரீட்சையில் எட்டுப்பேர் அத்வக்காத்மாராகவும், 15 பேர் பிரக்கிராசிமாராகவும் அரங்கேறியிருக்கின்றனர். அத்வக்காத்மாருள் ஒருவரும், பிரக்கிராசிமாருள் ஒருவரும் பெண்மணிகள். புதிய அத்வக்காத்மாருள் ஏ. தேவராஜா, ஈ. சபாபதி, எம். சண்முகலிங்கம், ஆர். சிவகுமாரன்என்பவர்களும், பிரக்கிராசிமாருள் சி. மகேசன், பி. சி. இம்மனுவேல், கே. சேனாதிராசா, எ... என்பவர்களும் தமிழர்களாவர்.

## நான் கிறீஸ்தவர்களின் கடவுளை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் வெளியேசென்ற சிறிது நேரத்துள் மார்சியுஸ் வழிப்போக்கனுடன் உள்ளேவந்து ஆல்பனைநோக்கி: "ஐயா! இவர்பெயர் அம்பிபோலஸ்; ஓர்கத்தோலிக்க குருவாம்" என்ருன். ஒருவர்ஒருவருக்கு வந்தனம்கூறினர். பிறகு அம்பிபோலஸ்: "ஐயா! நீங்கள்தானே சனங்கள் புகழ்ந்துபேசும் ஆல்பன்துரை?" என்றுவினுவினுர்.

"நான் பிறர்புகழ்ச்சியைப் பொருட்படுத்துவதில்லை."

"உங்களிடம் தாழ்ச்சியும் இருக்கிறதே!... ஐயா, தியோக்கிளேசியானின் சட்டப்படி நான்மரணத்தீர்வைக்குள்ளாயிருக்கிறேன். அவன்வீரர்கள் என்னைத்தேடி அலைகின்றனர். நானும் பிடிபடாமல் தப்பியோடித்திரிந்து இப்போது சோர்ந்துபோயிருக்கிறேன். நான்மரணத்துக்கு அஞ்சியவனென்று கிஞ்சித்தேனும் நினைக்கவேண்டாம். எனக்கு ஒருவேலை இருக்கிறது. அதை நான் செய்துமுடிக்க வேண்டும். இன்றிரவை இங்குகழிக்க அனுமதியளிக்க வேண்டும்."

"என்ன கிறீஸ்தவனுச்சுதே! அஞ்ஞான ரோமனுகிய என்னிடம் எப்படி உதவியைஎதிர்பார்க்கலாம்?"

"நான் இங்கிருக்க வேண்டுமென்பது கட்டளை."

"யாருடைய கட்டளை?"

"யாருடையசித்தப்படி நாங்கள் நடக்கிருேமோ அவருடையகட்டளை."

"அதாவது, உங்கள்கடவுளா?..." என்று முடிக்குமுன்னதாகவே வலேரியாள் உள்ளேவந்தாள். பக்கத்திலிருந்த மேசைமீது தண்ணீரைவைத்துவிட்டு, அங்குநின்ற மனிதரைச் சற்றேஉற்றுப்பார்த்துவிட்டுப் பிரமைகொண்டவளாய் ஒரு அடி பின்வாங்கினுள். இதைக்கவனித்த ஆல்பன் தன்மகளை அணுகிக் கட்டிப்பிடித்து, "பயப்படவேண்டாம்; இவர் தீங்கொன்றும் செய்யார்" என்ருன்.

"கலங்கவேண்டாம் பிள்ளாய்! உனக்குக் கடவுளின் ஆசீர்வாதம்."

"அப்பா இவர்தான்... இவரைத்தான் நான்..."

"நீ பார்த்தாயா?"

"ஆம், இவரைத்தான் வீதியில் கண்டேன். அதுஇவர்தான். இவரைக் கண்டதும் என்கண் கலங்கியது. இவர் ஒருசிலுவையைச் சுமந்துசென்ருரே...!"

"நிசம்தானு ஐயா?" என்று அம்பிபோலஸை உசாவினுர் ஆல்பன்.

"வேறுயாரோ! நானே சனசந்தடியில்லாத பாதைகளில் சஞ்சரிக்கிறேன். சிலுவையாவது! அதைச்சுமக்கிறதாவது! அதற்குநான் அருகனல்ல. நான் எனதுபாவமூடையைத்தான் சுமந்து அலைகிறேன்."

"வலேரியா! நான் சொன்னதுபோல் நீ கண்டது ஓர் கனவாகவே இருக்கவேண்டும். ஐயா, இவள் உங்கள் கடவுளைக் கண்டாளாம். எங்கள் தேவர்கள்மேல் இவளுக்குப் பற்றுதலென்பது இல்லையாம்..."

அதுமட்டுமா? அவர்களின் பீடங்களைத் தகர்த்து அவர்களின் சிலைகளையும் பொடியாக்கி விடுவேன்" என்றும் குமுக்கிட்டுக் கூறினுள் வலேரியாள். ஆல்பன் மிகவும்பயந்தவராய்: "என்ன சொல்லுகிருய்?" என்று கர்ச்சித்தார். வலேரியாள் ஏதோ பாவசத்தில் இருந்தவள்போல் கண்களை மேலெழுப்பிப் பிற்பாடு மேர்க்கறியின் சிலையை நோக்கியவளாய்: "தாவீதின் குமாரனுகிய யேசுவை விசுவசிக்கிறேன்" என்ருள். உடனே அந்தச்சிலை இருந்தபீடம் கிடுகிடென்று ஆடியது. சிலையும் கீழே விழுந்து நொறுங்கியது. ஆல்பன் வியர்த்து ஸ்தம்பித்துவிட்டார்.

"ஐயா! கலங்கவேண்டாம். இது எமது இரட்சகரின் செயல்."

"தந்தையே! தைரியமாயிருங்கள். நமக்கு யாதொன்றும் நேரிடாது."

ஆல்பன் சற்றுத் தெளிந்தவராய்: "அம்மா, நீதான் என்ஊன்றுகோல். என்னவேண்டுமானுலும் செய்."

"அப்பா, நமது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். கடவுள் நமதுகண்களைத் திறந்தார். இதோ கத்தோலிக்க குருவானவர் இருக்கிருர். அவரிடம் நாம் ஞானத்தீட்சைபெற்று, மெய்யங்கடவுளின் பிள்ளைகளாவோம்." இருவரும் அம்பிபோலஸ்முன்பாக முழங்கால்படியிட்டனர். அவரும் மேசையின் மேலிருந்த தண்ணீரை எடுத்து அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

இதற்குள் மாசியுஸ் பரபரப்புடன் உள்ளே ஓடிவந்து: ஐயா! ரோமவீரர் உருவியவாளுடன் நமது வீட்டைச் சோதிக்க வந்திருக்கிருர்கள்" என்ருன்.

"சுவாமி! நீங்கள் இங்கிருப்பதாக அவர்களுக்கு மூக்கு வியர்த்ததுபோலும்."

"ஆனுல், நான் தப்பவேண்டும். என் அலுவல் முடியவேண்டும். என்ன செய்வது?"

"ஓர் யுக்தி. என்னை ரோமவீரர் நன்ருய் அறிவார்கள். அவர்கள் என் சிநேகிதர். நாம்இருவரும் ஒரேஉயரமுள்ளவர்களாகவே இருக்கிருேம். நீங்கள் என்உடையை அணிந்துகொண்டால் நீங்களும், என்மகளும் தகப்பனும் பிள்ளையும்போல் வெளியே தப்பிவிடலாம்."

அம்பிபோலஸ் அதற்கு உடன்படாமல் "கடவுள் சித்தம்போல் ஆகட்டும்" என்று பிடிவாதமாகச் சொன்னுர்.

"சுவாமி! கடவுள் உங்களுக்கு ஒரு வேலையைக் கொடுத்திருக்கிருர். என் தகப்பனுரின்யோசனையைத்தவிர வேறு வழியில்லை. தாமதம் வேண்டாம். என் தகப்பனை நான்வெகுவாய் நேசித்தாலும் கடவுளுடையவேலையைச் செய்யவேண்டுமேயென்ற எண்ணம் எனக்கு ஒருவித தைரியம் கொடுக்கிறது. என் தந்தையை இழக்கநேரிட்டாலும் பரவாயில்லை. நீங்கள் காலதாமதம் செய்யவேவேண்டாம்" என்று கெஞ்சினுள்.

அம்பிபோலஸ் எவ்வளவுதான் மறுத்தபோதிலும் அவர்களுடைய கட்டாயத்தின்பேரில் ஆல்பனின் உடையைவாங்கி அணிந்தார் வலேரியாளும் அவர்கையைப் பிடித்துக்கொண்டு, மற்ற வாசல்வழியாய் வெளியேறிவிட்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம்ரோமவீரர் திமுதிமுவென்று ஆல்பன்இருந்த அறையில் புகுந்தனர். குருவானவர் உடைஅணிந்த ஒருவர் இருப்பதைக்கண்டதும் அவர்களுக்கிருந்த பைசாசசந்தோஷத்திற்கு அளவில்லை. தங்களுக்கு ஓர்பெரிய அதிர்ஷ்டம் என்றுசொல்லிக் கூத்தாடினர். ஆல்பனை முன்கட்டுப் பின்கட்டாகக் கட்டினர். அவரும் மௌனமாயிருந்தார். அப்பொழுது வீரரில் ஒருவன் அவரைக் கூர்ந்து பார்த்துவிட்டு: அடா, பட்சியானது பறந்துவிட்டதே! இது ரோமஇராச்சிய வீதிகள்அமைத்த ஆல்பன்அல்லோ?" என்ருன். ஆல்பன் தியோக்கிளேசியானின் சட்டத்திற்கு ஆளானுர். வேதசாட்சி முடிபெற்ருர்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 17-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org